வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 03 09.09.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 274 பக்கங்கள் : 16




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


பிள்ளையான், வியாழேந்திரன், சுரேன் ராகவன் உட்பட

# 37 இராஜாங்க அமைச்சர்கள் நேற்று பதவிகளையேற்றனர்!



கொழும்பு, செப். 09
ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் புதிய இராஜாங்க அமைச்சர்களாக நேற்று வியாழக்கிழமை 37 பேர் பதவிகளை ஏற்றனர்.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று காலை இவர்கள் பதவிகளை 15

# பிரித்தானியா மகாராணி எலிசபெத் காலமானார்!



பக்கிங்ஹாம், செப். 09
பிரித்தானியாவை நீண்டகாலம் ஆட்சி செய்த மகாராணி இரண்டாம் எலிசபெத் (வயது 96) பிரித்தானியா நேரம் நேற்று மாலை 6.00 மணியளவில் - (இலங்கை நேரம் -11. 20 மணியவில்) காலமானார். கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கும் இவரே மகாராணியாவார்.
நேற்று மாலை மகாராணியாரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது என அவரின் மருத்துவர்கள் தெரிவித்தனர். இதையடுத்து அவர் தங்கியிருந்த ஸ்கொட்லாந்தின் பால்மோரல் மாளிகையில் அரச 15

# சமந்தா பவர் நாளை இலங்கை வருகிறார்!



கொழும்பு, செப். 09
இரு நாள் உத்தியோ கப்பூர்வ விஜயத்தை மேற் கொண்டு அமெரிக்க உதவி திட்டத்தின் தலைமை அதிகாரி சமந்தா பவர் நாளை சனிக்கிழமை இலங் கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.
இந்த விஜயத்தின் போது 15

சுற்றுலா அபிவிருத்தியின் பெயரால்

# திருக்கோணேஸ்வரம் கோயில் காணியை ஆக்கிரமிக்க முயற்சி!

★ அபிவிருத்தி கூட்டத்தில் எதிர்ப்பு இல்லை
★ ஆலய பரிபாலன சபையினருக்கு மிரட்டல்
★ ஆளுநர், தொல்பொருள் திணைக்களம் உடந்தை



திருகோணமலை, செப்ரெம்பர் 09
ஈழத்தின் தொன்ம வரலாற்று சிறப்புமிக்க திருக்கோணேஸ்வரம் ஆலயம் அமைந்துள்ள - ஆலயத்துக்கு சொந்தமான காணியை உல்லாசதுறை அபிவிருத்தியின் பெயரால் ஆக்கிரமிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அறிய வருகின்றது. 15

# டிசெம்பர் மாதம் வரை மின்வெட்டு இல்லை!

கொழும்பு, செப். 09
எதிர்வரும் டிசெம்பர் வரை மின்வெட்டு தேவைப்படாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க, தற்போது மின்சார தேவை குறைந்துள்ளது என்று தெரிவித் துள்ள அவர் மேலும், 15

# சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டு சட்டம் நிறைவேறியது

ஆதரவாக 91, எதிராக 10 வாக்குகள்

கொழும்பு, செப். 09
பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டுச் சட்டமூலம்மீது ஆளும் எதிர்க்கட்சி கடும் வாத விவாதத்தில் ஈடுபட்டனர்.
இந்த நிலையில் மாலை 4. 50 மணியளவில் விவாதம் முடிவுற்றது. இதன்போது சபைக்கு தலைமை தாங்கிய சபா 15

# பாலியல் குற்றவாளிகளை தண்டிக்க இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது!

அமெரிக்காவின் பேர்ள் அமைப்பு

நியூயோர்க், செப். 09
தமிழர்களுக்கு எதிரான மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டவர்களை - குற்றவாளிகளை தண்டிப்பதற்கு இலங்கை தவறிவிட்டது என்று அமெரிக்காவை தளமாக கொண்ட பேர்ள் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.
சமத்துவம் மற்றும் நிவாரணத்துக்கான அமைப்பு (பேர்ள்) தனது புதிய அறிக்கையில்,
இலங்கை போரின்போது, 15

# சந்நிதியானுக்கு இன்று தேர்!

வடமராட்சி, செப். 09
வரலாற்று சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.
விசேட பூசை வழிபாடுகளை 15



வரலாற்று புகழ்மிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் சப்பைரதத் திருவிழா நேற்று இடம்பெற்றபோது...!

# எம்மை விமர்சிக்கும் அருகதை சாணக்கியனுக்குக் கிடையாது

நாமல் ராஜபக்ஷ எம். பி.



கொழும்பு, செப். 09
எமது தவறுகளைத் தட்டிக்கேட்கும் உரிமை எமக்கு வாக்களித்த மக்களுக்கு மாத்திரம் இருக்கிறதே தவிர, சந்தர்ப்பவாத அரசியல் நடத்தும் சாணக்கியன் போன்றவர்களுக்கு எந்தவோர் அருகதையும் கிடையாது என்று நாமல் ராஜபக்ஷ எம். பி. கூறியுள்ளார்.
தான் பாராளுமன்றத்தில் இல்லாதசமயம் இ. சாணக்கியன் எம். பி. தன்னைப் 15

# மரம் ஏறியவர் விழுந்து பலி!

யாழ்ப்பாணம், செப். 09
மரக் கிளைகளை வெட்டுவதற்காக மரத்தில் ஏறியவர் அதிலிருந்து தடுமாறி விழுந்து உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 15

## இப்படியும் நடக்கிறது...!

இப்போதெல்லாம் யாராவது அரசியல் தலைவர்கள் ஏதாவது கருத்துச் சொன்னால் சிலர் உடனே இந்த ஊர்க்குருவிக்கு தொலைபேசி எடுக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

தமது கருத்தை இந்த ஊர்க்குருவி ஊடாக சொல்வது அவர்களின் நோக்கமாக இருக்கவேண்டும்.

நேற்று இந்தப் பத்தியில் கூட்டமைப்பிலிருந்து பங்காளிக் கட்சிகளை வெளியேற்றவேண்டும் என்ற கருத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்திருந்த கருத்துப் பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

பங்காளிக் கட்சிகளை வெளியேற்றாவிட்டாலும் அவர்களைத் தேர்தலில் தோற்கடிப்பது எப்படி என்ற வித்தையையும் அவர் சொல்லியிருந்தார்.

அந்தப் பத்தியைப் படித்துவிட்டு ஒருவர் கனடாவிலிருந்து தொடர்பு கொண்டு கேட்டார், 'அதுதான் அவர் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சுமந்திரனுக்கு ஆதரவு வழங்கினார் போலும்' என்று கேட்டார்.

அவரின் கேள்வி, சுமந்திரனை தோற்கடிப்பதற்காகத்தான் அவர் ஆதரவு வழங்கினாரா? என்று கேட்பது போல இருந்தது.

'இல்லையே அவர், தான் தோற்றாலும் பரவாயில்லை. சுமந்திரன் வெல்ல வேண்டும் என்றல்லவா கூறியிருந்தார்' என்றேன்.

'அவர் கடந்த வாரம் நடந்த கூட்டத்தில் பங்காளிக் கட்சிகள் மட்டுமன்றி, தமிழ் அரசுக் கட்சியிலும் சிலர் தன்னிச்சையாக இராஜதந்திரிகளை சந்திப்பதும், அறிக்கைகள் விடுவதையும்தானே கண்டித்திருந்தார். ஆனால், அவரும் சில வேளைகளில் அதனைத்தானே செய்கின்றார்' என்று கேட்டார் அவர்.

அப்படி அவர் என்னதான் செய்கின்றார். சிலவேளைகளில் தனது மனதில்பட்டதை வெளிப்படையாக சொல்கிறாரே தவிர, அவர் தன்னிச்சையாக எதுவும் செய்வதில்லையே?' என்றேன்.

"கடைசியாக அமெரிக்காவுக்கு சென்றிருந்தபோது, ஈழத் தமிழர்களுக்காக சுதந்திரமான பொதுசன வாக்கெடுப்புக்கு வழிகோலுமாறு ஐக்கிய அமெரிக்க இராஜதந்திரிகளை கோரியிருந்ததாக உங்கள் பத்திரிகையில்தானே படித்தேன். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கை இல்லையே", என்றார்.

அவ்வாறான கோரிக்கை என்பது தமிழீழக் கோரிக்கைக்கு நிகரானது. புலம்பெயர் அமைப்புக்கள் சில, இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான் என்று நிரூபிப்பதற்காக தொடர்ந்து முயன்றுகொண்டிருக்கின்றன. அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் அந்த இனம் பிரிந்துபோவதற்கான வாக்கெடுப்பை நடத்துவதற்கு சந்தர்ப்பம் வரும் என்பது அவர்களின் நம்பிக்கை.

அந்த நம்பிக்கை சிறீதரனுக்கும் இருக்கலாம். ஆனால், அப்படியொரு நம்பிக்கை இருந்து, அதற்காக குரல்கொடுப்பது எனில் அவர் அதனை கூட்டமைப்பாக செய்யமுடியாது. ஏனெனில், கூட்டமைப்பு பிரிக்கப்படாத நாட்டுக்குள் தீர்வைக் காண 'சுழியோடி'க் கொண்டிருக்கின்றது.

கூட்டமைப்பின் கொள்கைக்கு விரோதமாக அவர் தன்னிச்சையாக இப்படியொரு கோரிக்கையை முன்வைக்க முடியும் என்றால், சுமந்திரன் தன்னிச்சையாக எதனையாவது செய்வதையோ அல்லது பங்காளிக் கட்சிகள் செய்வதையே குறைகூறமுடியாது என்ற அந்த கனடாக்காரரின் வாதமும் சரியானதுதான்.

பிரிந்து போகின்ற உரிமையுடன் கூடிய தீர்வுக்கு அமெரிக்க இராஜதந்திரிகளின் ஆதரவைக் கேட்ட சிறீதரன், கடந்த செவ்வாயன்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது, தமிழர்களுக்காக கொண்டுவரப்பட்ட மாகாண சபை என்றும் அது இப்போது யாரிடம் இருக்கின்றது என்றும் வேறு கேள்வி எழுப்பியுள்ளார்.

மாகாண சபைகளை தமிழர்களின் பிரச்னைகளின் தீர்வுக்கான தொடக்கப் புள்ளியாகக்கூட கொள்ளமுடியாது என்று கூறிக்கொண்டிருக்கும் சிறீதரன் போன்றவர்கள், எப்படி தமிழர்களுக்காக கொண்டுவரப்பட்ட மாகாண சபையில் இப்போது யார் இருக்கின்றார்கள் என்று கேட்கமுடியும் என்பது தெரியவில்லை.

யாருக்காகக் கொண்டுவரப்பட்டதோ அவர்கள் அதனை வேண்டாம் என்னும்போது, அதனை வேண்டும் என்று கருதுபவர்கள் உபயோகப்படுத்துவதை சிறீதரன் போன்றவர்கள் எப்படிக் கேள்விக்கு உட்படுத்துவது என்று தெரியவில்லை.

அதை எழுதிக்கொண்டிருக்கும் போது முன்னர் சஞ்சிகை ஒன்றில் படித்த துணுக்கு ஒன்றுதான் ஞாபகத்துக்கு வந்தது.

கணவன் சொன்னான், 'நம்ம பொண்ணை தீர விசாரிக்காமல் ஒரு முட்டாள் பயலுக்குக் கட்டிக் கொடுத்துட்டோம்..!' என்று.

அதற்கு மனைவி சொன்னாள், 'எங்கப்பா கூட இப்படித் தாங்க, நமக்கு கல்யாணம் ஆன பிறகு ரொம்ப நாள் புலம்பிக் கிட்டிருந்தாரு!'

- ஊர்க்குருவி

# அரசாங்க பொறிமுறைமீது எனக்கு நம்பிக்கையில்லை!

## மனோ கணேசன் எம். பி.

கொழும்பு, செப். 09

"பின்தங்கிய நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசாங்கத்தின் பொறிமுறைமீது எனக்கு நம்பிக்கை இல்லை. நிவாரணம் பெறுவோரைத் தெரிவு செய்வதில் பிரதேச செயலக, கிராம சேவகர் மட்ட அரச அதிகாரிகள் அரசியல் நோக்கிலும், இனவாத நோக்கில் செயல்படுகின்றனர்."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"உண்மையான நிர்க்கதியான மக்களுக்கு, இந்திய அரசு, தமிழக அரசு, உலக நாடுகள், ஐ. நா. அமைப்புகள் கொடையாக வழங்கும் நிவாரணங்கள் முறையாக கிடைப்பதில்லை. எனவே, நிவாரண நன்கொடைகள் நேரடியாக நிர்க்கதியான மக்களைச் சென்று அடைவதை உறுதிப்படுத்த அவற்றை சிவில் அமைப்புகள் மூலமாக சர்வதேச சமூகம் வழங்க வேண்டும். அவை கண்காணிக்கப்பட வேண்டும். நிவாரணம் பெறுகின்றவர்கள் யார் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி முன்வைத்த இடைக்கால பாதீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் நடைமுறை சாத்தியம் அற்றவை. கணிசமான யோசனைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் இல்லை. துண்டு விழும் தொகையை ஒருபோதும் நிதி அமைச்சர் ஜனாதிபதியால் சரி செய்ய முடியாது.

ஏற்கனவே அரச கஜானா காலி. ஆகவே எங்கே இருந்து நிதி வரப்போகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

இதனால்தான் நான் வரவு - செலவு திட்ட விவாதத்தில் உரையாற்றியபோது, எனது அக்கறை, அவதானம் ஆகியன, பின்தங்கிய நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் மாத்திரம் இருக்கின்றது எனக் கூறினேன். அதிலும், பின்தங்கிய மக்கள் யார் என்பதை அறிவதில் அதிக கண்காணிப்பு வேண்டும் எனக் கூறினேன்.

அரசியல் காரணமாகவும், தமிழர்கள் என்ற காரணத்தாலும், பாரபட்சமாக நமது மக்கள் நடத்தபடுவதை நான் இலங்கைக்கு உதவும் உலக சமூகத்துக்கு சொல்லி வருகிறேன். இன்னமும் சொல்வேன் - என்றார். (ஐ)

# தோட்ட தொழிலாளர்களுக்கு ஒக்ரோபர் விசேட கொடுப்பனவு

கொழும்பு, செப். 09

சகல பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும், நகரங்களிலுள்ள தோட்ட சமூகத்தினருக்கும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் உலக உணவுத் திட்டத்தின் கீழ் விசேட கொடுப்பனவு வழங்கப்படும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயகார நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

புதிய கூட்டத்தொடரின் தொழில் மற்றும் வெளிநாட்டு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத்தில் கலந்துகொண்டே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் நகர புறங்களில் உள்ள தோட்ட சமூகத்தினருக்கு இதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது காணப்படும் நெருக்கடிக்கு மத்தியில் ஜப்பான், கொரியா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு அதிக தொழிலாளர்களை அனுப்புவதை ஒழுங்குமுறைப் படுத்த தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேபோன்று ஜப்பான் போன்ற நாடுகளுக்குத் தொழிலாளர்களை அனுப்புவதாகத் தெரிவித்து வகுப்புகளை நடத்தும் மோசடிக்காரர்கள் இருப்பதால் பொதுமக்கள் சரியானதைத் தேடிப்பெற்றுக் கொண்டு செயல்பட வேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ள கைத்தொழில் பிணக்குகள் (திருத்தச்) சட்டமூலம் இரண்டு மற்றும் வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் என்பனவும் இங்கு கருத்தில் கொள்ளப்பட்டதுடன் அவற்றுக்கான அனுமதியும் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரட்ன, வடிவேல் சுரேஷ், டி.பி. ஹேரத், வேலுகுமார், அரவிந்த குமார் உள்ளிட்டவர்களும், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# கொழும்பு பங்கு சந்தையின் வர்த்தக நேரம் உயர்கின்றது

கொழும்பு, செப். 09

கொழும்பு பங்குச் சந்தையின் வர்த்தக நேரத்தை நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழு மற்றும் பங்குத் தரகு நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து, 2022 செப்ரெம்பர் 15 வியாழன் முதல் இவ்வாறு வர்த்தக நேரம் நீடிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில், காலை 10.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை 2 மணி நேரமாக இருந்த பங்குச் சந்தையின் வழக்கமான வர்த்தக நேரம், காலை 10.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரை இரண்டரை மணி நேரமாக நீடிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, செப். 09

மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது சந்தேகநபர்களை கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி, சந்தேகநபர்களை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

# புதைக்கப்பட்ட சிறுமி; பொலிஸார் விசாரணை

இரத்தினபுரி, செப். 09

இரத்தினபுரி - தெல்வலை பகுதியில் காட்டில் இரகசியமான முறையில் 7 வயது சிறுமி புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமியின் தாய் வேறு ஒருவருடன் வசிக்கும் நிலையில், சிறுமி தாக்கப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்த மாணிக்கக்கல் ஒன்று காணாமல் போனமைக்காக கறுவாத் தடியால் சிறுமி தாக்கப்பட்டுள்ளார். பின்னர், தாக்குதலுக்கு உள்ளான சிறுமியை மருத்துவமனையில் சேர்க்காமல் இருந்துள்ளனர்.

இந்நிலையில், சிறுமியின் தாயாருடன் வசிக்கும் நபரை மதுபான விற்பனை தொடர்பில் கைது செய்ய பொலிஸார் சென்றிருந்த போது, வீட்டிலிருந்த அனைவருடனும் குறித்த நபர் காட்டுக்குள் சென்று தலைமறைவாகியுள்ளார்.

ஏற்கனவே தாக்குதலுக்கு இலக்காகியிருந்த 7 வயது சிறுமி, இதன்போது உயிரிழந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
09.09.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# திருக்கோணேஸ்வரத்துக்கு ஆபத்து?

தட்சண கைலாசம் என்று அழைக்கப்படும் இந்துக்களின் வரலாற்றுத் தொன்மைமிக்க பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருகோணமலை திருக்கோணேஸ்வரம் உல்லாசத் துறை அபிவிருத்தி என்னும் பெயரில் ஆக்கிரமிக்கப்படும் ஆபத்தை எதிர்கொண்டிருக்கின்றது. தமிழர் தாயகத்தில் பல இடங்களிலும் தங்களின் ஆக்கிரமிப்பு வேலைத் திட்டங்களை கச்சிதமாக முன்னெடுத்துவரும் தொல்பொருள் திணைக்களமானது தற்போது திருக்கோணேஸ்வரத்தின்மீதும் கண்வைத்துவிட்டது.

இது தொடர்பில் ஆலய பரிபாலன சபையோடு தொடர்புகொண்டு 'ஈழநாடு' விடயங்களை ஆராய்ந்தது. அதன் அடிப்படையிலேயே இந்த விடயத்தை தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டுவருகின்றது.

இந்த ஆசிரியர் தலையங்கத்தை எழுதிக் கொண்டிருக்கும்போது, 'மொட்டு' அணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான அட்மிரல் சரத்வீரசேகரவின் ஆவேச உரை தொடர்பான செய்தியொன்று கண்ணில்பட்டது. அதாவது, இது சிங்கள- பௌத்த நாடு. இங்கு தூபிகளை பராமரிக்க எவருடைய அனுமதியையும் பெறவேண்டியதில்லை. அது தொல்பொருள் திணைக்களத்தின் பணியாகும் என்று அவர் தெரிவித்திருக்கின்றார். இவ்வாறானதோர் அச்சுறுத்தும் தொனியில்தான் திருகோணமலை மாவட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரியும் திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையிடம் தெரிவித்திருக்கின்றார். எங்களுடைய திட்டங்களை அமுல்படுத்த உங்களின் அனுமதி எங்களுக்கு தேவையில்லை. ஒரு தகவலுக்காவே இதனை உங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

ஒரு காலத்தில் தமிழர் தாயகத்தின் தலைநகரமென்று அழைக்கப்பட்ட திருகோணமலையோ இன்று நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியிருக்கின்றது. திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினரான இரா. சம்பந்தன், கடந்த இரண்டு வருடங்களாகத் திருகோணமலைக்கு செல்லவில்லை. இந்த நிலையில், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் தட்டிக் கேட்க ஆளில்லாத நிலையில் சிங்கள தரப்புக்கள் தங்களுக்கு தேவையான அனைத்து முடிவுகளையும் எவ்வித தடையுமின்றி எடுக்கக் கூடிய நிலையிலிருக்கின்றனர். இதற்கப்பால், ஆளுநரின் ஆதரவும் அவர்களுக்கு இருப்பதாகத் தெரிகின்றது. ஆலய பரிபாலன சபை மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஒன்றின்போது, திருகோணமலை அழகான நகரம். ஆனால் இன்றோ, இலங்கையிலேயே மிகவும் மோசமான அழகற்ற இடமாக திருகோணமலையே காணப்படுகின்றது என்றவாறு ஆளுநர் தெரிவித்திருக்கின்றார். இதன் மூலம் தொல்பொருள் திணைக்களத்தின் திட்டத்தை ஆளுநர் ஆசீர்வதிக்கின்றார் என்பது தெளிவு.

கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை மிகவும் உறுதியாக இந்த விடயத்தை எதிர்க்கின்றது. அதாவது, அபிவிருத்தியை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் ஆலயத்துக்கு சொந்தமான 18 ஏக்கர் காணிக்குள் எவ்வித திட்டங்களையும் அனுமதிக்க முடியாது. இது ஒரு புனித இந்து ஆலயம். உல்லாசப்பயணம் என்னும் பெயரில் இதன் புனித தன்மையை சீரழிக்கும் முயற்சியை அனுமதிக்க முடியாதென்று அவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனாலும் அரசியல் பலமில்லாத நிலையில், ஆலய பரிபாலன சபை அச்சமடைந்திருக்கின்றது.

இது வெறுமனே திருகோணமலை இந்து மக்களின் பிரச்னை மட்டுமல்ல. உலகம் தழுவிவாழும் அனைத்து இந்து மக்களின் பிரச்னையாகும். எனவே, இந்த விடயத்தில் அனைவரும் உடனடி கவனத்தை செலுத்து வேண்டும். இல்லாவிட்டால் ஒரு வரலாற்று இந்து ஆலயம் திட்டமிட்டு சிதைக்கப்படுவதற்கு நாம் அனைவருமே உடந்தையாக இருக்கின்றோம் என்னும் வரலாற்று பழியே மிஞ்சும். வழமையாக தொல்பொருள் இடங்களை பாதுகாத்தல் என்னும் அடிப்படையில் தலையீடுகளை மேற்கொண்டுவந்தவர்கள், இப்போது, நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, உல்லாசத்துறை அபிவிருத்தி என்னும் பெயரில் திருக்கோணேஸ்வர ஆலய எல்லைக்குள் நுழைய முயற்சிக்கின்றனர்.

# ஜனாதிபதி ரணிலுக்கு சவாலாகப் போகும் ஜெனிவா-51

அலசுவது இராஜதந்திரி



*ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் இத்தடவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவால் நிறைந்ததாக இருக்கும் என்றே கருத முடியும்.*

*ஏனெனில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர் ஸ்தானிகர் இத்தடவை பதினேழு பக்க எழுத்து மூல அறிக்கையாக இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் பெரிதும் மீறப்பட்டுள்ள மையை சுட்டிக்காட்டியுள்ளார். இந்நிலை யில், இலங்கையின் ஆட்சியாளர்கள் கிணற்று தவளைகள்போல உலக நடப்புகளையும் தம்மீதான சர்வதேச சமூகத்தின் பார்வையையும் அறிந்திராததையே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உயர் ஸ்தானிகர் தமது கணிப்புகளின் அடிப்படையில் சமர்ப்பித்துள்ள அறிக்கை விளங்குகின்றது.*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்பதாக பதவியிலிருந்த ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்‌ஷ, கோட்டாபய ராஜபக்‌ஷ ஆகியோர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையையே நிராகரிக்குமளவுக்கு தமது நிலைப்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். இதன்காரணமாக தமது தலையில் தாமே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டுள்ளதையே மிச்செல் பச்லெட் அம்மையாரின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.*

*ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஒரு முக்கிய பிரமுகரான மிச்சேல் பச்லெட் அம்மையார் இலங்கை அரசாங்கம் நீதியை நிலை நாட்டாவிடில் சர்வதேச மட்டத்திலான நடவடிக்கை இலங்கைமீது எடுக்கப்படும் என்று கூறியுள்ளார். அத்துடன், இலங்கைமீது நீதியை நிலைநாட்டும் விதத்தில் உறுப்பு நாடுகள் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டுமெனவும் மிச்சேல் பச்லெட் கூறியுள்ளமை மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டியதாக உள்ளது.*

*ஏனெனில், சீனா தவிர உறுப்பு நாடுகள் பலவும் இலங்கைமீது நீதி விசாரணைகளை பிரயோகிக்க வேண்டியதன் அவசியத்தை எப்போதும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தி வந்திருந்தன. ஆனால், இந்தத் தடவை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லெட் அம்மையாரே நேரடியாகப் பதினேழு பக்க அறிக்கையாக இலங்கை நீதியை நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். இது விடயத்தில் ஏற்கனவே ஜெனிவாவுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடரில் பங்கு பற்ற பயணமாகியுள்ள இலங்கை அரச தரப்பினர் சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும்.*


*ஏனெனில், அவர்கள் ஜெனிவாவில் குறிப்பிடவுள்ளவற்றைவிட மிச்சேல் பச்லெட் அம்மையாரின் இலங்கையில் மனித உரிமைகள் குறித்த கண்ணோட்டமே முக்கியத்துவம் பெற்றதாக இருக்கும். நடுநிலையான அவரின் அறிக்கையை உறுப்பு நாடுகள் மிக அவதானத்துடன் கவனத்தில் எடுக்கும் தன்மையே காணப்படும். ஏனெனில், இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுற்றதுமுதல் இடம்பெற்ற அத்துமீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமைகள் பேரவையில் பிரஸ்தாபிக்கப்பட்டே வந்திருந்தன. இருந்தபோதிலும் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை மீதான தீர்மானம் 46-1, ஜெனிவா கூட்டத்தொடரில் கொண்டு வரப்பட்டிருந்தது. நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு என்பவற்றை உள்ளடக்கிய பலதரப்பட்ட அம்சங்களை உள்ளடக்கியதாகவே இலங்கை மீதான 2021ஆம் ஆண்டு தீர்மானங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் கொண்டு வரப்பட்டிருந்தன.*

*ஆனால், அந்தத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டது முதல் இன்றுவரை அவற்றில் பெரும்பாலானவை நிறைவேற்றப்படாதிருக்கின்றன. இவற்றைக் கவனத்தில் எடுத்ததாகவும் அண்மைக்காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற அடிப்படை மனித உரிமைகளை மீறும் சம்பவங்களை முன்னிறுத்தியதாகவே மிச்சேல் பச்லெட்டின் பதினேழு பக்க எழுத்து மூல அறிக்கை காணப்படுகின்றது.*

*எனவே, ஜனாதிபதியாக தெரிவான பின்னர் ரணில் விக்கிரமசிங்க சந்திக்கவுள்ள - மிச்சேல் பச்லெட்டின் அறிக்கையுடன் கூடிய 51ஆவது ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இலங்கை பொருளாதார ரீதியான நெருக்கடிக்கும் உள்ளாகியுள்ள நிலையில் மிச்சேல் பச்லெட் அம்மையாரின் அறிக்கைக்கு தற்போதைய இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் ஜெனிவாவில் எவ்வாறு பதிலளிக்கப் போகின்றனர் என்பதே முக்கிய வினாவாக இருக்கின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 09 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 25
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**
எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். புதிய முயற்சி பலன் தரும். உங்கள் எண்ணம் பலிதமாகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். நண்பர்களால் உங்கள் செயல் நிறைவேறும்.

**இடபம்**
வருவாயில் இருந்த தடை விலகும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். விவேகமுடன் செயல்பட்டு திட்டமிட்ட செயலை செய்து முடிப்பீர்கள்.பணியிடத்தில் உங்களின் செல்வாக்கு கூடும்.

**மிதுனம்**
அலைச்சல் அதிகரிக்கும். வருமானத்தில் தடை உண்டாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். செயலில் கவனம் தேவை. திடீர் பயணம் ஏற்படும். உங்கள் எதிர்பார்ப்பு இழுபறியாகும்.

**கடகம்**
வாழ்க்கைத் துணையின் உதவியுடன் தள்ளிப் போன சுப நிகழ்ச்சியை நடத்த முயல்வீர்கள்.நண்பர்களிடம் ஏற்பட்ட பிரச்னை முடிவிற்கு வரும். எதிர்பார்த்த வருவாய் உண்டு.

**சிம்மம்**
உங்களின் செல்வாக்கு இன்று வெளிப்படும். நீண்ட நாள் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். மனதில் இருந்த குழப்பம் விலகும். உடல் நிலையில் இருந்த சங்கடங்கள் நீங்கும்.

**கன்னி**
பொருளாதார நிலை உயரும்.நண்பர்களின் உதவியுடன் எதிர்ப்புகளை வெல்வீர்கள். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். எதிர்பாராத வருவாய் வந்து சங்கடங்களை நீக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்**
முயற்சியில் ஆதாய நிலை தோன்றும். ஆசைகளுக்கு இடம் கொடுக்காமல் செயல்பட்டால் முயற்சிகளில் லாபம் காண்பீர்கள்.மனதை அலைபாய விடாதீர்கள். சேமிப்பில் ஆர்வம் கூடும்.

**விருட்சிகம்**
உங்கள் நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சியான நாள். எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். நீங்கள் விரும்பிய வற்றில் வெற்றி காண்பீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**தனுசு**
பணம், நகைகளை கையாளுவதில் கவனம் வேண்டும். உங்கள் எண்ணத்தில் ஒன்று நிறை வேறும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். எதிர்பார்த்த வரவுகளால் செலவுகளை சமாளிப்பீர்கள்.

**மகரம்**
இனம் புரியாத குழப்பம் ஏற்படும்.மனம் விரும்பும் வகையில் செயல்படுவீர்கள். எதிர்பார்ப்புகளில் ஏமாற்றம் உண்டாகும்.நினைத்ததை அடைய வேண்டுமென்று துணிச்சலுடன் செயல்படுவீர்கள்.

**கும்பம்**
அரசு வழி முயற்சியில் தடையும் தாமதமும் ஏற்படும். ஆடம்பர செலவுகள் செய்து சங்கடத்திற்கு ஆளாவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும்.எதிர்பாராத செலவுகளால் பணத் தட்டுப்பாடு ஏற்படும்.

**மீனம்**
வருமானத்தில் உண்டான தடைகள் விலகும். மகிழ்ச்சியான நாள்.உங்களை விட்டு விலகிச் சென்றவர்கள் மீண்டும் வருவார்கள். ஆசை ஒன்று நிறைவேறும். நிதிநிலை உயரும்.

# அ.தி.மு.க. பொதுச் செயலாளரை தெரிவு செய்யும் பணி விரைவில்

## எடப்பாடி பழனிசாமி



சென்னை, செப். 08

"விரைவில் கட்சியின் பொதுச் செயலாளரை தெரிவு செய்யும் பணி தொடங்கும்" என்று அ. தி. மு. க. இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கட்சி தலைமையகத்துக்கு 72 நாட்களுக்கு பின்னர் சென்ற அவருக்கு நேற்று பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. இதன்போது செய்தியாளர்களை சந்தித்த அவர்,

"பொதுக்குழுவில் இடைக்காலப் பொதுச் செயலாளர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அந்த சமயத்தில் நீதிமன்றம் சென்றுவிட்டதால், பொதுச் செயலாளர் தெரிவு செய்யும் பணி தடைபட்டது. விரைவில் கட்சியின் பொது செயலாளரை தேர்வு செய்யும் பணி தொடங்கும்.

பொதுக்குழுவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. எங்கள் தரப்பிலும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் எங்களது தரப்பு ஆதாரங்களை சமர்ப்பித்து வாதிடுவோம்.

அ. தி. மு. கவில் பிளவு என்பதே கிடையாது. ஒருசிலர் கட்சிக்கு எதிராக செயல்பட்டதால், பொதுக்குழு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளது. இரண்டு அணியாக பிரிந்தால் தான் பிளவு, இது பிளவு கிடையாது. அ. தி. மு. கவுக்கு துரோகம் விளைவித்தவர்கள், இந்தக் கட்சிக்கு அவப்பெயர் விளைவித்தவர்கள், கட்சிக்கு எதிராக செயல்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பன்னீர்செல்வம் மன்னிப்புக் கேட்டால் எப்படி ஏற்றுக்கொள்வார்கள் தொண்டர்கள். கட்சியின் உயர்ந்த பொறுப்பில் இருந்த ஒருவரே கொள்ளைக் கூட்டத்துக்கு தலைமை தாங்குகிற மாதிரி ரவுடிகளுடன் பொலிஸ் பாதுகாப்புடன் வந்து அ. தி. மு. க. அலுவலகத்தை அடித்து நொறுக்கிய காட்சியை நாட்டு மக்களே பார்த்தனர். இப்படிப்பட்டவர்களை தொண்டர்கள் எப்படி மன்னிப்பார்கள்.

தொண்டர்களுக்கானதுதான் இந்த கட்சி தலைவருக்கு அல்ல. இணையும் போது அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பன்னீர்செல்வத்துக்கு அவ்வளவு பெரிய பொறுப்பு கொடுத்தோம்.

ஆனால், அவர் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டிருக்கின்ற போது, அவர் தி. மு. கவுக்கு உடந்தையாக பினாமியாக இருக்கின்றபோது, எங்கள் கட்சியை உடைக்கவும், அவதூறு பரப்ப வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்" - என்றார்.

# இலங்கையின் பிடியிலுள்ள 23 மீனவர்களை விடுவிக்குக

## அமைச்சருக்கு முதல்வர் கடிதம்



சென்னை, செப். 09

இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள மீனவர்களையும், அவர்களின் மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரிடம் முதல்வர் மு. க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மத்திய அமைச்சருக்கு மு. க. ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில், கடந்த 9 மாதங்களில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 150 தமிழக மீனவர்களை தூதரக நடவடிக்கைகள் மூலம் விடுவிக்க உதவியமைக்காக தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 6ஆம் திகதி புதுச்சேரியைச் சேர்ந்த விசைப்படகில் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் உள்ளிட்ட 12 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டமையை கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

தற்போதைய நிலவரப்படி, இலங்கை அரசின் வசம் 23 மீனவர்களும், 95 மீன்பிடிப் படகுகளும் உள்ளன. இதனால், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களின் மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க தேவையான தூதரக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றுள்ளது.



உலகப் பிரசித்தி பெற்ற நாகபட்டனம் வேளாங்கன்னி மாதா ஆலய தேர்த் திருவிழா நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

# இது சிங்கள - பௌத்த நாடு!

## சபையில் சரத் வீரசேகர எச்சரிக்கை



கொழும்பு, செப். 09

**“இது சிங்கள பௌத்த நாடு என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இங்கு பழைய தூபிகளைப் பராமரிக்க எவருடைய அனுமதியையும் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது” என்று தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர, வேறு நாட்டில் என்றால் பெரும்பான்மையான மதமொன்றுக்கு வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவர் இடையூறு ஏற்படுத்தினால் அதற்கு மறுநாள் அவர் காணாமல் போயிருப்பார் என்று மறைமுக எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற சிறுவர் மற்றும் தாய்மார்களின் மந்தபோசனை தொடர்பில் யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே சரத் வீரசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒகஸ்ட் 31 ஆம் திகதியன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற ஒருவர் முல்லைத்தீவு குருந்தூர் மலை விகாரையின் விகாராதிபதி சட்டவிரோத நிர்மாணத்தை மேற்கொள்கின்றார் என்று தெரிவித்து பொய்யான தகவலை பாராளுமன்றத்துக்கு அறிவித்து, பாராளுமன்றத்தையும் மக்களையும் தவறாக வழிநடத்த முயற்சித்துள்ளார்.

தொல்பொருள் அகழ்வுப் பணிகளை நிறுத்துவதற்கான தீய எண்ணத்துடனேயே அவர் அவ்வாறு கூறியுள்ளார்.

முல்லைத்தீவு நீதிவான் அந்த நிர்மாணத்தை நிறுத்துவதற்கு உத்தரவு வழங்கியிருந்தார். அதன் பின்னர் பொலிஸார் நகர்த்தல் பத்திரமொன்று மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணிகளுடன் அந்த இடத்துக்குச் சென்று அவதானித்து அந்த வழக்கை நீக்கிக்கொண்டுள்ளனர்.

இதன்படி தொல்லியல் திணைக்களத்துக்கு அதனைப் பராமரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படியே நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

குருந்தூர் அசோக விகாரை என்பது 2 ஆயிரம் வருடங்கள் வரையில் பழமையான பௌத்த விகாரை தொகுதியாகும். தீபவம்சம் மற்றும் மகாவம்சத்துக்கு அமைய குருந்தூர் மலை உண்மைக் கதையை எழுதிய வரலாற்று இடமாகும்.

அங்கு அகழ்வுகளின்போது புத்தர் சிலைகள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன. ஆனால், அங்கு எந்த இடத்திலும் இந்து ஆலயம் இருந்தமைக்கான சாட்சியம் இல்லை. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்று நடந்த சம்பவத்துக்கு வெட்கப்படவேண்டும்.

இங்கு புனித சின்னங்களை பிரதிஷ்டை செய்யும் நிகழ்வு ஜூன் 12 ஆம் திகதி நடைபெற்றது. அதில் பௌத்த பீடங்களின் நாயக்க தேரர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிலர் குண்டர் குழுக்களுடன் சென்று அதைக் குழப்பினர். மலர் ஒன்றை வைத்துக்கூட பூஜை செய்ய முடியாத வகையில் பிக்குகள் திரும்பியிருந்தனர்.

இந்த பௌத்த நாட்டில் பௌத்த சாசனத்தை அவமதிக்கும் வேலையைச் செய்தும், பௌத்தர்கள் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருப்பதை மௌனித்திருப்பதாகக் கருத வேண்டாம் என்று அன்று நான் பாராளுமன்றத்தில் கூறினேன்.

அன்று விடுதலைப்புலிகள் மக்களையும், அரந்தலாவ பிக்குகள் உள்ளிட்டவர்களையும் கொலை செய்யும் போதும் கொழும்பில் இந்து ஆலயங்களில் திருவிழாக்கள் நடந்தன. பௌத்தர்கள் எந்தத் தடைகளையும் ஏற்படுத்தவில்லை. அதனால் நீங்கள் செய்யும் வேலையால் அனைத்து தமிழ் மக்களுக்கும் அவமானத்தையே கொண்டுவந்துள்ளது. இது பௌத்த நாடாகும். சிங்கள பௌத்த நாடு என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்குலக நாடொன்றின் தூதுவர் ஒருவர், ஏன் சிங்கள பௌத்த நாடு என்று கூறுகின்றீர்கள் என்று, ஒருவரிடம் கேட் டுள்ளார். நீங்கள் தேவேந்திர முனையில் இருந்து காங்கேசன்துறைக்கு உலங்கு வானூர்தியில் போகும்போது தெரியும் விகாரைகள் ஆயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முன்னர் அமைக்கப்பட்டுள்ள மையாலேயே அவ்வாறு கூறுகின்றோம் என்று தூதுவருக்கு அவர் விளக்கமளித் துள்ளார்.

இங்கு பழைய தூபிகளைப் பராமரிக்க எவருடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் அவசியமில்லை. அது தொல்பொருள் திணைக்களத்தின் பணியாகும். இந்து ஆலயங்கள், முஸ்லிம் பள்ளிகள் இந்த நாட்டில் அமைக்கப்படுகின்றன. அதற்கு பௌத்தர்கள் ஒரு போதும் எதிர்ப்பு வெளியிடுவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அந்த பாராளுமன்ற உறுப்பினர் வடக்கில் பௌத்த விகாரைகளை அமைக்க வேண்டாம் என்று கோஷங்களை எழுப்பிவிட்டு கொழும்புக்கு வந்து மீண்டும் வடக்குக்குப் போவதானது இது பௌத்த நாடு என்பதனாலேயே என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

வேறு நாட்டில் பெரும்பான்மையான மதமொன்றுக்கு வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவர் இடையூறு ஏற்படுத்தினால் அதற்கு மறுநாள் அவர் காணாமல் போயி ருப்பார். குருந்தூர் விகாரை பராமரிப்புக்காக இடைவிடாது செய்யும் இடையூறுகளை நிறுத்தவேண்டும் என்று நாங்கள் மிகவும் விநயமாக அவர்களிடம் கேட்கின்றோம்.

இந்தப் பராமரிப்புப் பணிகளை தொல்பொருள் திணைக்களம் நிறுத்தாது முன்னெடுத்துச் செல்லும். அது நிறுத்தப்படாது.

இதேவேளை, இந்த நடவடிக்கைகளால் இனச் சுத்திகரிப்பு செயற்பாடு நடக்கும் என்று அந்த பாராளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தில் 25 ஆயிரம் வரையிலான சிங்களக் குடும்பங்கள் இருந்தன. இப்போது எத்தனை பேர் இருக்கின்றனர். அங்கு இப்போது எவ்வளவு முஸ்லிம் குடும்பங்கள் இருக்கின்றன? உண்மையில் இனச் சுத்திகரிப்பு நடந்திருந்தால் சிங்களம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராகவே நடந்திருக்கும்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சரியான பாதைகளைக் காட்டுங்கள், இல்லாவிட்டால் இவர்களை விரட்டியடிங்கள் என்று நான் தமிழ் மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்-என்றார். (அ)

## வெள்ளம் பாதித்த பாகிஸ்தானுக்கு இலங்கையின் தேயிலை நன்கொடை

கொழும்பு, செப். 09

பாகிஸ்தானில் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் வரலாறு காணாத இழப்பு ஏற்பட்டு உள்ளது. நாடு முழுவதும் 1,200 இக்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர். இந்த இயற்கை பேரிடரில் சிக்கியுள்ள பாகிஸ்தானுக்கு பல்வேறு நாடுகள் உதவிக்கரம் நீட்டி வருகின்றன. அந்த வகையில் இலங்கையும் பாகிஸ்தானுக்கு உதவ முன்வந்துள்ளது.

பாகிஸ்தானில் வெள்ளத்தில் சிக்கி நிவாரண முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு வழங்குவதற்காக தேயிலையை நன்கொடையாக அளித்து உள்ளது.

கொழும்புவில் உள்ள பாகிஸ்தான் தூதர் உமர் பரூக் பர்கியிடம் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி இந்த தேயிலையை ஒப்படைத்தார். கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்தாலும், இலங்கையின் இந்த மனிதாபிமான நடவடிக்கை சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. (அ)

## தனியார், பொது நிறுவனங்களின் எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கும்

கொழும்பு, செப். 09

தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கான சிறப்பு வகை இந்த வாரம் பரிசோதிக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய எரிபொருள் பாஸ் (கியூ.ஆர்) முறையை மீளாய்வு செய்வதற்காக ஒன்லைன் மூலமாக நடைபெற்ற அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் பங்குதாரர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் இது தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிடையில், சுற்றுலா எரிபொருள் பாஸ் மற்றும் வாகனம் அல்லாத வகை அடுத்த வாரம் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

மேலும் கியூ.ஆர். குறியீட்டை சட்டவிரோதமாக பயன்படுத்துவதை தடுக்கும் வகையில், எரிபொருளை பெற்றுக்கொள்ளும்போது உருவாகும் குறுஞ்செய்தியில் அடுத்த வாரம் முதல் நிரப்பு நிலையக் குறியீடு சேர்க்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## யாழ்ப்பாண மாநகர சபைக்கு விரைவில் தீயணைப்பு வாகனம்



யாழ்ப்பாணம், செப். 09

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தீயணைப்பு வாகனம் விரைவில் கையளிக்கப்படவுள்ளது. இந்த வாகனம் ஜப்பானில் இருந்து கொண்டுவரப்பட்டு கொழும்பில் மறுசீரமைப்பு செய்யப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபை தீயணைப்பு பிரிவில் இருந்த தீயணைப்பு வாகனம் கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நீர்வேலியில் இடம்பெற்ற விபத்தில் முழுமையாக சேதமடைந்தது. இதன்பின்னர் மாநகர சபைக்கான தீயணைப்பு வாகனம் இல்லாதிருந்ததுடன் இது தொடர்பில் 2020 இல் அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. எனினும் அதற்கான பதில் இன்றுவரை கிடைக்கவில்லை.

இவ்வாறான நிலையில் யாழ்ப்பாணத்துக்கு அவசரமாக ஒரு வாகனம் தேவையென்பதைக் கருத்தில் கொண்டு வர்த்தகர் சங்கம் கொடையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையின் தலைவர் எஸ்.பி. சாமி மற்றும் அவரது மகன் மருத்துவர் கேசவ ராஜா ஆகிய இருவரும் இதற்கு தாங்களே முழு நிதியையும் ஏற்றுக்கொள்வதாக உறுதியளித்தனர்.

இந்த தீயணைப்பு வாகனம் ஜப்பானில் இருந்து கொண்டுவரப்பட்டு கொழும்பில் வைத்து இயந்திரப் பகுதி , நீர் விசிறல் பகுதி, குழாய்கள் என்பன மறுசீரமைப்பு செய்யப்பட்டன.

இதேவேளை, கொண்டுவரப்பட்ட தீயணைப்பு வாகனம் நீர் விசிறி பரீட்சிப்பு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இம்மாதம் இறுதிக்குள் உத்தியோகபூர்வமாக யாழ்.மாநகர சபைக்கு கையளிக்கப்படவுள்ளது. (அ)

# குடாநாட்டில் பாண் விலையை அதிகரிக்குமாறு அச்சுறுத்தல்!

## யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 09

யாழ்ப்பாணத்தில் பாணை அதிக விலைக்கு விற்குமாறு சிலர் அச்சுறுத்தல் விடுத்து அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர் க. குணரத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோதுமை மாவிற்கான தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் பாணின் விலையை அதிகரிக்கவேண்டும் என சில வெதுப்பாக உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

யாழ்.மாவட்ட செயலக ஏற்பாட்டில் கோதுமை மா மற்றும் எரிபொருள் என்பன சலுகை அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

அதனால் பாணின் விலையை அதிகரிக்க வேண்டிய தேவை இல்லை. இதனை கடந்த வாரம் ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்து இருந்தேன்.

நான் இன்று நேற்று வெதுப்பக தொழிலை ஆரம்பித்தவன் அல்லன். பல ஆண்டு ணகளாக பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தொழில் செய்தவன்.

தற்போதைய நிலையில் 200 ரூபாய்க்கு பாண் விற்பனை செய்வதனால் வெதுப்பக உரிமையாளர்களுக்கு எந்த பாதிப்போ நஷ்டமோ ஏற்பட்ட மாட்டாது.

சிறிய அளவிலான வெதுப்பக உற்பத்திகளை மேற்கொள்வோரே 200 ரூபாய்க்கு பாணை விற்பனை செய்ய இணக்கம் தெரிவித்து, விற்பனை செய்கின்றனர்.

ஆனால் சில பெரிய வெதுப்பக உரிமையாளர்கள் தமக்கு நட்டம் எனவும் , பாணின் விலையை அதிகரியுங்கள் எனவும் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு அழுத்தங்களை தருகின்றனர். அதிலும் ஒரு சிலர் அச்சுறுத்தும் முகமாகவும் கதைக்கின்றார்கள்.

சிலரின் தேவைக்காக நாமும் பாணின் விலையை அதிகரித்து ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கத் தயார் இல்லை. பாணின் விலையை 10 ரூபாய் குறைத்து 190 ரூபாய்க்கு விற்பனை செய்வதற்கு ஏதுவான நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்-என்றார். (அ)

## நிலக்கரி கொள்வனவு முறைகேடு; அரசின் விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, செப். 09

நிலக்கரி கொள்வனவு தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்க நிதி தொடர்பான குழு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர விடுத்த கோரிக்கைக்கு அமைய, இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நிலக்கரி கொள்வனவு ஒப்பந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துமாறு மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அரசாங்கத்தின் நிதிக்குழுவின் தலைவரிடம் எழுத்துமூலம் கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

இதற்கமைய இது தொடர்பான விசாரணைக்காக சபா நாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். (அ)

## வாகன உதிரிப்பாகங்களின் விலை கடுமையாக உயர்வு!

கொழும்பு, செப். 09

நாட்டில் வாகன இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில் வாகன உதிரிப்பாகங்களின் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்துள்ளது என தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள், கார்கள், பஸ்கள் போன்றவற்றின் சில்லுகள், பற்றரிகளின் விலைகள் சடுதி யாக அதிகரித்துள்ளது.

நீண்ட நாட்களாக சந்தையில் சில உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்படாமையினால் வாகன உதிரிப்பாகங்களின் விலை நூற்றுக்கு முன்னூறு சதவீதம் எனும் விகிதத்தில் அதிகரித்திருப்பதாகவும், இதன் காரணமாக வாகனங்களை பராமரிக்க முடியாமல் பாவனையாளர்கள் தவித்து வருவதாகவும் தெரிவிக்கப்டுகின்றது.

இந்நிலையில் 4000 முதல் 5000 ரூபா வரையில் இருந்த மோட்டார் சைக்கிள் சில்லுகள் தற்போது 12,000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

3600 ரூபாவாக இருந்த மோட்டார் சைக்கிள் பற்றரி 9000 ரூபாவை தாண்டியுள்ளது. 450 ரூபாவாக இருந்த பிரேக் லைனர் 1200 ரூபாவாகவும், 4000 ரூபாவாக இருந்த செயின் ஸ்ப்ராக்கெட் 9000 ரூபாவாகவும், 800 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒயில் 1600 ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை, 35,000 ரூபாவாக இருந்த பஸ்ஸின் சில்லுகள் 75,000 ரூபாவாகவும், 24,000 ரூபாவாக இருந்த பற்றரிகள் 70,000 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்வதில் ஏற்படும் பிரச்னைகள் மற்றும் தட்டுப்பாடு காரணமாகவே இவ்வாறு உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கையின் கையிருப்பு 5.6 சதவீதத்தினால் வீழ்ச்சி!

கொழும்பு, செப். 09

கடந்த ஒகஸ்ட் மாத இறுதியில் இலங்கையின் உத்தியோக பூர்வ கையிருப்பு சொத்துக்கள் 1,716 அமெரிக்க டொலர்களாக இருந்ததாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஜூலை மாதத்தில் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்து மதிப்பு 1,817 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது.

எனவே, ஒகஸ்ட் மாதத்தில் அது 5.6 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

இதற்கிடையில், அந்நிய செலாவணி கையிருப்பு, ஆகஸ்ட் மாதத்தில் 1,619 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

## ஜோன்ஸ்டனின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த இருவர் கைது!

கொழும்பு, செப். 09

கடந்த மே மாதம் 09ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் இல்லம் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில் 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்டனர்.

22 மற்றும் 23 வயதான ஹோகந்தர பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டனர்.

இதனிடையே, கடந்த மே மாதம் 09ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்துக்குள் பிரவேசித்து அங்கிருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகக் கூறப்படும் மற்றுமொரு சந்தேகநபர் கைதாகினார்.

பொரலஸ்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதான குறித்த சந்தேகநபர் உயன பகுதியில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(அ)

## பெரும்போக நெற்செய்கையை உரிய காலத்தில் ஆரம்பிக்குக!

கொழும்பு, செப். 09

பெரும்போக செய்கையை உரிய காலத்தில் ஆரம்பிக்குமாறு விவசாய அமைச்சு, விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

பெரும்போக செய்கைக்கு தேவையான உரத்தை விவசாயிகளின் தேவைக்கேற்ப பெற்றுக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உலக சந்தையிலிருந்தும் உரத்தை இறக்குமதி செய்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் டொலர் தட்டுப்பாடு காரணமாக சில நிறுவனங்கள் உர விநியோகத்தை நிராகரிப்பதாகவும் இலங்கையின் நிபந்தனைகளுக்கு இணங்குவதில்லை எனவும் அவர் கூறினார்.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் சிறுபோகத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட உரத்தில் 10,000 மெட்ரிக் தொன் உரம் கையிருப்பில் உள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பெரும்போகத்திற்கு முன்னர் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்கும் விவசாயிகளுக்கு அதனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைத்த 40 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் மற்றும் உலக வங்கியிடமிருந்து கிடைத்த 110 மில்லியன் டொலர் கடன் ஆகியவற்றினூடாக முன்பதிவு செய்யப்பட்டுள்ள பசளை எதிர்வரும் நவம்பர் மாதமளவில் கிடைக்கும் என விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

இதனிடையே, உலக சந்தையில் உரத்தை முன்பதிவு செய்வதற்கான நாணய மாற்றுப் பத்திரத்தை திறப்பதற்கு தற்போது இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சின் உயரதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## இறக்குமதி செய்யப்படும் சோளத்துக்கு விசேட வரி



கொழும்பு, செப். 09

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் சோளத்திற்கு 10 ரூபா விசேட பண்ட வரி விதிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை கடந்த 3ஆம் திகதி வெளியிட்டுள்ளார்.

சோளத்திற்கான 10 ரூபா விசேட பண்ட வரியிலிருந்து ஒரு ரூபாவை மாத்திரம் அறவிடவுள்ளதுடன், எஞ்சிய தொகை திரிபோஷ உற்பத்திக்காக ஸ்ரீ லங்கா திரிபோஷ லிமிட்டட் நிறுவனத்துக்கு வழங்கப்படும் என குறித்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டளை, கடந்த 4 ஆந் திகதி முதல் எதிர்வரும் டிசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு



# பயங்கரவாத தடுப்புப் பிரிவிலிருந்து தொலைபேசியூடாக அச்சுறுத்தல்கள்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 09

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம்பெறும் தறுவாயில் கூட இலங்கை அரசின் அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் எல்லையில்லாமல் தொடரு கின்றன என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தெரிவித்தார்.**

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் இருந்து தொலைபேசி அழைப்பினூடாக அச்சுறுத்தல் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை யிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இன்று (நேற்று) பிற்பகல் 02.40 மணி யளவில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் இருந்து கதைப்பதாக ஒரு அழைப்பு வந்தது. எங்கள் ஜனநாயகப் பேராளிகள் கட்சி தொடர்பிலான விசார ணைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் கட்சியின் தலைவர், செயலாளரின் விவரங்களைத் தருமாறும் கேட்கப்பட்டது.

அப்போது நான் அழைப்பெடுத்தவர் தொடர்பில் கேட்கையில் அது சொல்ல வேண்டிய அவசியமில்லை என உரத்த தொனியில் கூறப்பட்டது. அத்துடன் எங்கள் கட்சியின் தலைவர், செயலாளரின் தொடர்பிலக்கம் தருமாறு கூறப்பட்டது.

இதேவேளை, அவர் தொலைபேசி உரையாடலின் பண்பினைக் காட்டா விட்டாலும் எங்கள் கட்சிக்கும், எமக்கும் உரித்தான பண்பின் அடிப்படையில் எங்கள் மடியில் எவ்வித கனமும் இல்லாத காரணத்தினால் எங்கள் கட்சியின் தலைவர், செயலாளரின் தொடர்பி லக்கத்தைத் தருவதாகத் தெரிவித்திருந் தேன்.

அதன் பிற்பாடு அவர்களின் பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை விவரம் என்பன கேட்கப்பட்டன. அதற்கு அவைகளெல்லாம் என்னிடம் இல்லை. தொலைபேசி இலக்கம் தரப் பட்டுள்ளது. அதனூடாகத் தொடர்பு கொண்டு அவர்களிடமே பெற்றுக் கொள்ளுங்கள் என்று தெரிவித்தேன்.

அதன் பிற்பாடு மிகவும் எச்சரிக்கை யானதும், அச்சறுத்தும் விதமானதுமான வார்த்தைப் பிரயோகங்கள் அந்தத் தொலைபேசியினூடாக வந்தது. உங் களை நாங்கள் பார்த்துக் கொள்ளவேண் டிய இடத்தில் பார்த்துக் கொள்வோம். அழைக்கவேண்டிய இடத்தில் உங்களை அழைத்தால் தான் சரி என்றவாறெல் லாம் மிரட்டல்கள் இடம்பெற்றன.

இவ்விடயம் தொடர்பில் எங்கள் கட்சியின் தலைமைகளுடன் கலந்தா லோசித்துள்ளோம். இது தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு மேற்கொள் வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## மோதலில் ஒருவர் மரணம்!

கொழும்பு, செப்.09

கொழும்பு - வாழைத்தோட்டம் பகு தியில் சிலரிடையே ஏற்பட்ட மோதலின் போது ஆயுதங்களால் தாக்கப்பட்டதில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த மோதல் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர்.

கொழும்பு - 12 பகுதியைச் சேர்ந்த 43 வயதான நபரே இந்தச் சம்பவத்தில் உயிரி ழந்துள்ளார். படுகாயமடைந்த பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று முன் தினம் இரவு இடம் பெற்ற இந்தச் சம்பவத்துடன் தொடர் புடைய சந்தேகநபர்கள் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## புதிய நெல் வகை கண்டுபிடிப்பு மூன்றரை மாதங்களில் அறுவடை

கொழும்பு, செப். 09

மூன்றரை மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய புதிய நெல் வகை யொன்று காலி - லபுதுவ அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தினால் கண்டறி யப்பட்டுள்ளது.

12 வருட ஆராய்ச்சியின் பலனாக இந்த புதிய நெல் வகை கண்டறியப் பட்டுள்ளது.

"எல்.டி 376" என பெயரிடப்பட் டுள்ள குறித்த நெல் வகையானது நாட் டின் எந்த பகுதியிலும் பயிரிட முடி யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தமிதாவுக்கு விளக்கமறியல்

கொழும்பு, செப். 09

போராட்ட செயற்பாட்டாளரும் நடிகையுமான தமிதா அபேரத்ன விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரை நேற்று கோட்டை நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்திய பின்னர் எதிர் வரும் 14 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம், ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்து அதன் சொத் துக்களை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன் தினம் பத்தரமுல்லை தியத்த உயனேயில் நடைபெற்ற ஆர்ப் பாட்டத்தில் கலந்துகொண்டபோது தமிதா அபேரத்ன, கொழும்பு வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவின் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். (அ)

## 40 பவுண் நகை, 65 ஆயிரம் ரூபா பணம் வாழைச்சேனையில் அதிகாலை திருட்டு

மட்டக்களப்பு, செப். 09

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள யூனியன் கொலனி பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றின் யன்னல் கதவை உடைத்து அங்கிருந்த 40 பவுண் தங்க ஆபரணங் கள், 65 ஆயிரம் ரூபா பணம் என்ப வற்றை திருடிச் சென்ற சம் பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை யில் இடம் பெற்றுள்ளதாக வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் தாயும் மகனும் இருந்துள்ள நிலையில் சம்பவதினமான நேற்று இரவு 12 மணிக்கு பின்னர் ஆழ்ந்த நித்திரையில் இருந்து காலையில் எழுந்திருந்தபோது வீட்டின் யன்னல் கிறிலை உடைத்து உள்நுழைந்த திருடர் கள் அங்கு பை ஒன்றில் வைத்திருந்த 40 தங்க ஆபரணங்கள், 65 ஆயிரம்ரூபா பணம் என்பவற்றை திருடிச் சென்றமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## இல்மனைட் அகழ்வுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராய்வு

அம்பாறை, செப். 09



அம்பாறை - திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வுக்கு அனுமதி வழங்கு வது தொடர்பாக ஆராயும் உயர்மட்ட கலந்துரையாடல், திருக்கோவில் பிரதேச செய லகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத் தின் ஒழுங்கமைப்பில், அம் பாறை மாவட்ட செயலாளர் ஜே.எம். எல்.டக்ளஸின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேசத்தில் சுமார் 3 கிலோமீற்றர் தூரத்துக்கு இல்மனைட் அகழ்வுகள் மேற்கொள்வதற்கான முன் னாய்த்த பணிகள் இடம்பெற்று வருகின் றன. அந்தவகையில், இல்மனைட் அகழ் வுக்கான அனுமதிகள் வழங்குவது தொடர் பாக இதன்போது ஆராயப்பட்டன.

இல்மனைட் அகழ்வுப் பணிகளுக் காக கரையோர பாதுகாப்புத் திணைக் களம் மற்றும் புவிச்சரிதவியல் திணைக் களம் என்பன தமது சம்மதங்களைத் தெரிவித்துள்ளபோதும், திருக்கோவில் பிரதேச சபை, திருக்கோவில் பிரதேச செய லகம் மற்றும் மாவட்டச் செயலகத்தின் அனுமதிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக இங்கு ஆராயப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாவட்ட செயலாளர், இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக சுமார் 50 மில்லி யன் டொலர்கள் நாட்டுக்கு இலாபமாக கிடைக்கவுள்ளதுடன், இப்பிரதேசத்தில் பல்வேறு பாரிய பௌதிக ரீதியான அபிவிருத்தி பணிகளும் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதற்கான அனுமதிகள் வழங்குவது தொடர்பாக பொதுமக்களை விழிப் புணர்வு செய்வதோடு, ஒரு கண்காணிப் புக் குழு ஒன்றையும் அமைக்கவுள்ளதாக வும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கு ஒத்துழைக்குமாறும் கோரிக்கை விடுத்தார். இதற்கு மறுப்புத் தெரிவித்து திருக் கோவில் பிரதேச சபையின் தவிசா ளர் மற்றும் உறுப்பினர்கள் இல்மனைட் அகழ்வுக்கு அனுமதி வழங்க முடியாது என தமது தீர்மானத்தை முன்வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து இல்மனைட் அகழ்வுக்கு சார்பாகவும் எதிராகவும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டு, இறுதித் தீர்மானம் ஏதும் எட்டப்படாத நிலை யில் கூட்டம் நிறைவுற்றது. (அ)

## நாணய நிதியத்துடன் செய்த ஒப்பந்தம் உரிய அனுமதியின் பின் வெளியாகும்!

கொழும்பு, செப். 09

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட பணியாளர் மட்ட ஒப்பந்தம் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் அனுமதியைப் பெற்ற பின்னர் வெளியிடப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊழியர் மட்ட ஒப்பந்தத்தின் அடிப் படையில் இலங்கைக்கு நிதியை வழங்கு வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறை வேற்றுச் சபை அடுத்த சில வாரங்களுக் குள் தனது ஒப்புதலை வழங்கும் என எதிர் பார்க்கப்படுவதாக பிரதமர் கூறினார்.

பணியாளர்கள் நிலை ஒப்பந்தம் சர்வ தேச நாணய நிதியநிர்வாகக் குழுவால் அங் கீகரிக்கப்பட்டதும், ஒப்பந்தம் கிடைக் கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## வங்கி அட்டை பயன்படுத்தி மோசடி செய்தவர் சிக்கினார்!

கொழும்பு, செப். 09

பல்வேறு நபர்களை ஏமாற்றி வங்கி அட்டைகளை அபகரித்து சுமார் 20 இலட்சம் ரூபாவை மோசடி செய்த நபரை கடுவெல பொலிஸார் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் மல்வான பிரதேசத்தைச் சேர்ந்தவர். இவர் கடுவலை, நவகமுவ, மாலபே உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஏ.ரி.எம் இயந்திரங்களில் பணம் எடுக்க வரும் நபர் அட்டையை உள்ளே செருக முடியாத வகையில் இயந்திரத்தை பூட்டி வைத்துள்ளார்.

பின்னர், பணம் எடுக்க உதவுவதாகக் கூறி, கார்ட்டின் பின்னைக் கேட்டு, பிற ஏ.ரி. எம் மையங்களுக்குச் சென்று, பல் வேறு தந்திரங்களை பயன்படுத்தி பணம் எடுத் துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

ஈழநாடு




# லண்டனில் திருடப்பட்ட சொகுசு கார்

## பாகிஸ்தானின் கராச்சியில் சிக்கியது எப்படி?

பாகிஸ்தானின் மிகப்பெரிய நகரான கராச்சிக்கு நீங்கள் சென்றால், அங்கே அனைத்து விதமான வண்டிகளும் சாலையில் ஓடுவதை பார்க்க முடியும். ஆனால், சமூக வலைதளங்களில் தற்போது அதிகம் பேசப்பட்டு வரும் ஒரு வண்டியின் கதை தனித்துவமானது.

அயல்நாட்டு உளவு நிறுவனம் ஒன்று சுங்கத்துறைக்கு கொடுத்த தகவலின் பேரில் அதிகாரிகள் கராச்சி நகரின் டி. ஹெச்.ஏ பகுதியில் ஒரு வண்டியை தேடிக் கொண்டிருந்தனர். சுங்கத்துறை பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் படி, லண்டனில் இருந்து திருடப்பட்ட வண்டி பாகிஸ்தானுக்கு கொண்டுவரப் பட்டதாக ஒரு தகவல் கிடைத்தாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அது சாதாரண வண்டி அல்ல, அது பென்ட்லி முல்சான் செடான் ஆட்டோ மேட்டிக் கார். அதன் மதிப்பு சுமார் 30 கோடி பாகிஸ்தான் ரூபாயை விட அதிகம்.

உளவு நிறுவனங்கள் இந்த காரை பற்றி நீண்ட காலமாக பேசிக் கொண்டிருந்தன. இந்த வண்டி கடந்த ஆகஸ்ட் 30ஆம் தேதி ஒரு வீட்டின் முன்புறம் நிறுத்தப்பட்டிருந்ததாக தகவல் கிடைத்தது. இதையடுத்து சுங்கத்துறை அதிகாரிகள் அந்த வீட்டில் ரெய்டு நடத்தி காரை பறிமுதல் செய்தனர்.

கறுப்பு நிற துணியால் அந்த கார் மூடப்பட்டிருந்தது. அந்த துணியை அகற்றிய போது காரில் உள்ளூர் நம்பர் பிளேட் இருந்துள்ளது.

சுங்கத்துறை அதிகாரிகள் அறிக்கையின்படி காரின் “சேசிஸ்” எண்ணை அதிகாரிகள் கண்டறிந்ததும் அதை பரிசோதித்து அது உளவுத்துறை அதிகாரிகள் கொடுத்த அதே எண் என்பதை கண்டுபிடித்துள்ளனர். அதன் பிறகே கார் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த கார் திருட்டு சம்பவத்தில் இருவர் ஈடுபட்டுள்ளனர். கராச்சியில் இந்த காரை வைத்திருந்த உரிமையாளர், தனக்கு இந்த காரை விற்ற நபர்கள் 2022 நவம்பருக்குள் சட்ட ஆவணங்களை முறைப்படி முடித்துத் தந்து விடுவதாக உறுதியளித்தனர் என சுங்கத்துறை அதிகாரிகளிடம் கூறியுள்ளார்.

இந்த கார் பறிமுதல் செய்யப்பட்ட காட்சிகளை சிலர் காணொளியில் பதிவு செய்து சமூக ஊடகங்களில் பரப்பியதும் பலரும் அது குறித்து கேள்வி எழுப்பத்தொடங்கினர்.

### லண்டனில் இருந்து இந்த கார் கராச்சிக்கு வந்தது எப்படி?

இது குறித்து அதிகாரிகளிடம் கேட்டபோது, விசாரணையின் முடிவில் தான் முழு விவரங்களும் வெளிவரும். ஆனால் லண்டனில் திருடப்பட்ட கார் பாகிஸ்தானை வந்தடைந்து எப்படி என அறிந்துகொள்ள பிபிசி உருது சேவை முயன்றது.

பாக் வீல்ஸ் நிறுவனத்தின் நிறுவனர்களில் ஒருவரான சுனில் முஞ்ச் சில விஷயங்களை பகிர்ந்து கொண்டார்.

இந்த திருட்டு சம்பவங்களில் சில கும்பல்கள் ஈடுபடுகின்றன. எங்கே திருட்டு நடக்கிறதோ, அங்கே திருட்டு குறித்து புகார் பதிவு செய்யப்படாமல் பார்த்துக் கொள்வதை உறுதி செய்கிறார்கள்.

அப்போது, கார் எந்த நாட்டில் இருந்து கிளம்புகிறதோ, எந்த நாட்டுக்கு சென்றடைகிறதோ இரு தரப்பிலும் ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு அனுப்பப்பட்டு விடும்.

ஒருவேளை கார் திருட்டு புகார் ஆகியிருந்தால், துறைமுகத்தில் சோதனையின்போது மாட்டிக் கொள்ளும். ஆகவே கார் திருடுபோனது புகார் ஆகாமல் இருப்பது அந்த கும்பல்களுக்கு முக்கியம்.

### துறைமுகத்தில் கார் ஏறும்வரை ரகசியம் காத்த முகவர்கள்

இந்த காரை பொறுத்தவரையில், லண்டனில் இருந்து பாகிஸ்தானுக்கு கார் கைமாற்றப்படும்வரை, அது திருடுபோன கார் என்பது யாருக்கும் தெரியாது. பாகிஸ்தான் துறைமுகத்தில் இருந்து கார் வெளியேறியதும், லண்டனில் கார் திருடுபோனது குறித்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏனெனில் அப்போதுதான் அவர்கள் காப்பீட்டுத் தொகையை பெறமுடியும்.

இப்படித்தான் அந்த கும்பல்கள் செயல்படுகின்றன. கார் முறைப்படி ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்குச் சென்றவுடன் திருடுபோனது பதிவு செய்யப்படும், பின்னர் கார் உரிமையாளர் அதை தேடத் தொடங்கி விடுவார் என விவரித்தார் சுனில் முஞ்ச்.

ஆனால், இது ஒன்றும் முதல் விவகாரம் இல்லை. பாகிஸ்தானில் நிறைய கார்கள் இப்படி உள்ளூர் எண்ணுடன் ஓடுகின்றன. இது நாட்டின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் என்கிறார் அவர்.



பாகிஸ்தானுக்கு இந்த கார் வந்தபோது சுங்கத் துறை அதிகாரிகள் இந்த வண்டியை 4 கோடியே 14 லட்சம் ( பாகிஸ்தான் ரூபாவில்) மதிப்பு கொண்டது என மதிப்பிட்டுள்ளார்கள். ஆனால் தற்போதைய சூழலில் டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு சரிவு காரணமாக 5 கோடியே 85 லட்சம் என மதிப்பிடப்படுகிறது. பல்வேறு வரிகளை எல்லாம் சேர்த்து, தற்போது இந்த காரின் மதிப்பு பாகிஸ்தான் ரூபாயில் சுமார் 30 கோடி ரூபாயாகும்.

கேலிக்குள்ளான சம்பவம்

இந்த கார் விவகாரம் பாகிஸ்தானில் சமூக ஊடகங்களில் விவாத பொருளாக மாறியுள்ள நிலையில், பலர் இது குறித்து கிண்டல் அடிக்கத் தொடங்கியுள்ளனர்.

லண்டனில் இருந்து திருடி பாகிஸ்தானுக்கு கடத்திய நபருக்கு பரிசு தர வேண்டும் என ஒரு பயனர் எழுதியுள்ளார். லண்டன்காரர்கள் இந்த ஒரு துணை கண்டத்தையே கொள்ளையடித்தார்கள் அவர்கள் ஒரு காரைத் தானே கொள்ளையடித்தனர் என இன்னொரு பயனர் எழுதி இருக்கிறார்.

பென்ட்லி காரை லண்டனில் இருந்து திருடி உங்கள் பாக்கெட்டில் வைத்து பாகிஸ்தானுக்கு கொண்டு வந்துவிடலாம், நீங்கள் பாகிஸ்தானில் அந்த காரை பதிவு செய்யவும் முடியும் என எழுதியுள்ளார்.

அதே சமயம், இந்த கார் எப்படி லண்டனில் இருந்து பாகிஸ்தான் வந்திருக்க முடியும்? முழு விசாரணை தேவை என்றும் சிலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

**பாகிஸ்தானுக்கு இந்த கார் வந்தபோது சுங்கத் துறை அதிகாரிகள் இந்த வண்டியை 4 கோடியே 14 லட்சம் (பாகிஸ்தான் ரூபாவில்) மதிப்பு கொண்டது என மதிப்பிட்டுள்ளார்கள். ஆனால் தற்போதைய சூழலில் டால ருக்கு எதிரான ரூபாய் மதிப்பு சரிவு காரணமாக 5 கோடியே 85 லட்சம் என மதிப்பிடப்படுகிறது. பல்வேறு வரிகளை எல்லாம் சேர்த்து, தற்போது இந்த காரின் மதிப்பு பாகிஸ்தான் ரூபாயில் சுமார் 30 கோடி ரூபாயாகும்.**

ஈழநாடு



# தமிழ் பகுதிகளில் சீனாவின் ஆர்வம்?

யதீந்திரா



வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், வரலாற்று ரீதியாக இந்தியாவுடன் மட்டுமே, உணர்வு ரீதியாக பிணைந்திருக்கின்றனர். இதற்கு தமிழ்நாடு ஒரு பிரதான காரணமாகும். இரண்டாவது காரணம் இந்து மதமாகும். வடக்கு கிழக்கு இந்து தமிழர்களை பெரும்பான்மையாக கொண்டிருக்கும் ஒரு தமிழ் பகுதி. இவ்வாறானதொரு சூழலில்தான் பொருளாதார தேவைகளை ஒரு விடயமாகக் கொண்டு, சீனா அதன் நகர்வுகளை மேற்கொள்கின்றது.

இலங்கையில் சீனாவின் பிரசன்னம் அதிகம் பேசப்படும் ஒன்று. சர்வதேசளவில் இலங்கையின் நெருக்கடிகள் சீன-சிறிலங்கா உறவின் வழியாகவே நோக்கப்படுகின்றது. இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான பிரதான காரணமாகவும் சீனாவே நோக்கப்படுகின்றது. அண்மையில் அமெரிக்க வெளியக உளவுத் துறையான சி.ஐ.ஏயின் தலைவர் கூட, ஒரு கலந்துரையாடலின் போது, சீனாவுடன் தூரநோக்கின்றி பொருளாதார தொடர்புகளை பேணிக் கொள்ளும் நாடுகள் இலங்கையிலிருந்து கற்றுகொள்ள வேண்டுமென்று கூறியிருந்தார். இலங்கை தூரநோக்கின்றி சீனாவின் திட்டங்களை அனுமதித்ததன் விளைவாகவே, இன்று பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். சி.ஐ.ஏயின் தலைவர் இவ்வாறு கூறுவதிலிருந்து எந்தளவிற்கு, சீன விவகாரம் மேற்குலகால் நோக்கப்படுகின்றது என்பதை புரிந்துகொள்ள முடியும்.

சீனாவிற்கும் சிறிலங்காவிற்குமான இருதரப்பு உறவு 1957களிலிருந்து நீடிக்கின்றது. ஆனாலும் நாடுகளுக்கிடையிலான சாதாரண உறவாகவே அது இருந்தது. ஆனால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போதுதான், சீன-இலங்கை உறவில் சடுதியான மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தியாவும் அமெரிக்காவும் இறுதி யுத்தத்தின் போது, ஆயுத தளபாட உதவிகளை செய்வதற்கு மறுத்திருந்த நிலையில்தான், சீனா அந்த இடத்தை கச்சிதமாக பயன்படுத்திக்கொண்டது. இந்த பின்னணியில் நோக்கினால், மகிந்த ராஜபக்ச காலம்தான் சீனாவிற்கும் சிறிலங்காவிற்குமான தேனிலவுக் காலமாக இருந்தது. 1978இலிருந்து இலங்கைக்கு கடனுதவி வழங்கும் நாடுகளில் முதன்மையான இடத்தை ஜப்பானே பெற்றிருந்தது. மகிந்த காலத்தில் ஜப்பானின் இடத்தை சீனா எடுத்துக் கொண்டது.

இலங்கையில் சீனாவின் பிரசன்னம் முதல் பார்வையில் இந்தியாவிற்கே சிக்கலானது. ஏனெனில் இலங்கை ஒரு உடனடி அயல்நாடு. இந்தியாவின் உடனடி அயல்நாடொன்றிற்குள், சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பது நீண்ட கால நோக்கில் இந்தியாவிற்கு சிக்கலானதாகும். அடுத்தது அமெரிக்காவின் நோக்கிலும் சீனாவின் பிரசன்னம் சிக்கலானது. ஆனால் அமெரிக்காவின் அவதானம் உலகளாவியது. சீனாவின் செல்வாக்கு இந்து சமூத்திர பிராந்தியத்தில் அதிகரித்துச் செல்லுதல் என்னும் நோக்கில்தான் இந்த விடயத்தை அமெரிக்கா நோக்கும்.

இந்த பின்னணியில்தான், இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க ராஜாகங்கச் செயலர், மைக் பொம்பியோ, இலங்கையின் இறைமையை சீனா, கடலிலும் நிலத்திலும் மோசமாக மீறிவருவதாக குற்றம் சாட்டிருந்தார். சீனாவின் பிரசன்னம் சிக்கலானது என்னுமடிப்படையில்தான் இவ்வாறானதொரு கடுமையான அறிக்கையை பொம்பியோ வெளியிட்டிருந்தார். பொம்பியோவின் கூற்றுக்கள், சீனாவின் பிடிக்குள் அகப்பட்டிருக்கும் ஒரு நாடாக இலங்கையை நோக்குவதற்கான பார்வையை முன்வைத்தது. இன்று இலங்கை தொடர்பில் வெளிவரும் உலகளாவிய அவதானம் இந்த பின்புலத்தில்தான் முன்வைக்கப்படுகின்றது.

ஆனால் சீனா இவ்வாறான கடுமையான குற்றச்சாட்டுக்களால் பின்வாங்கும் நிலையிலில்லை. கிடைத்த சந்தர்பத்தை கச்சிதமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்னும் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றது. தெற்கில் வலுவாக காலூன்றிருக்கும் சீனா, தற்போது தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் வடக்கு கிழக்கு பகுதிகளிலும் காலூன்றுவதற்கான வாய்ப்புக்களை தேடுவது போல் தெரிகின்றது. சீனத் தூதுவர், வடக்கு கிழக்கிற்கு விஜயங்களை மேற்கொள்வதில் அதிக ஆர்வத்தை காண்பிக்கின்றார். இவ்வாறானதொரு ஆர்வத்தை முன்னர் சீனா ஒரு போதும் வெளிப்படுத்தியதில்லை. வடக்கிற்கு விஜயத்தை மேற்கொண்டு தமிழ் மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் நோக்கில் கலந்துரையாடல்களில் தூதுவர் ஈடுபடுகின்றார். அதேபோன்றுதான் கிழக்கிலும். சமூக நலத்திட்டங்களுக்கு நிதியளிப்பதில் ஆர்வம் காண்பிக்கின்றார். இதன் மூலம் முழு இலங்கையிலும் தங்களின் பிரசன்னத்தை வைத்திருக்க வேண்டுமென்று சீனா விரும்புவது போல் தெரிகின்றது. கிழக்கிலங்கையில் மட்டக்களப்பில் நலிவுற்றவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான சிறியளவிலான உதவிகளை சீனா செய்திருக்கின்றது. அதே போன்று விவசாய திட்டமொன்றையும் பரீசிலிக்கவுள்ளது.

சீனாவிற்கும் தமிழர்களுக்கும் வரலாற்று ரீதியான தொடர்புகளுண்டு. இந்த தொடர்புகளை ஆராயும் முயற்சியிலும் சீனா முன்னர் ஈடுபட்டிருந்தது. இந்த நிலையில்தான் அண்மைக் காலமாக தமிழ் பகுதிகளுடானான தொர்புகளை அதிகரிக்க முயற்சிக்கின்றது. இதுவும் இந்தியாவிற்கு சிக்கலான ஒன்றுதான். ஏனெனில் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், எவர் ஆதரவளித்தாலும், அதனை பெற்றுக் கொள்ளும் நிலையிலேயே இருக்கின்றனர். இந்த நிலைமையானது மறுபுறமாக, தமிழர்களுடனான சீனாவின் ஊடாட்டங்களை அதிகரிப்பதற்கு மிகவும் சாதகமானது. குறிப்பாக கிழக்கிலங்கையிலுள்ள மாவட்டங்களில் வாழும் வறுமை நிலையிலுள்ள தமிழ் மக்கள் பல்வேறு பொருளாதார நெருக்கடிளை எதிர்கொண்டு வருகின்றனர். கிழக்கிலங்கை தமிழ் மக்கள் பல்வேறு வழிகளிலும் பின்தங்கியிருப்பதாகவும் தனிமைப் படுத்தப் பட்டிருப்பதான பார்வையொன்றும் கிழக்கிலங்கையின் படித்த தமிழர்கள் மத்தியிலுண்டு. இந்த பின்புலத்தில்தான் சீனத் தூதரகத்தை நாடும் போக்கு உருவாகியது. வடக்கு கிழக்கில் வாழும் பின்தங்கிய மக்கள் தொடர்பில் சீனத் தூதரகம் பிரத்தியேக மதிப்பீடுகளையும் செய்திருக்கலாம்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், வரலாற்று ரீதியாக இந்தியாவுடன் மட்டுமே, உணர்வு ரீதியாக பிணைந்திருக்கின்றனர். இதற்கு தமிழ்நாடு ஒரு பிரதான காரணமாகும். இரண்டாவது காரணம் இந்து மதமாகும். வடக்கு கிழக்கு இந்து தமிழர்களை பெரும்பான்மையாக கொண்டிருக்கும் ஒரு தமிழ் பகுதி. இவ்வாறானதொரு சூழலில்தான் பொருளாதார தேவைகளை ஒரு விடயமாகக் கொண்டு, சீனா அதன் நகர்வுகளை மேற்கொள்கின்றது.

நிலைமை சீனாவிற்கு சாதகமாகவே இருக்கின்றது. சீனா கொஞ்சம் கொஞ்சமாக முன்னெடுக்கும் திட்டங்கள் காலப் போக்கில், தமிழ் பகுதிகளில் சீன ஆதரவு பிரிவுகளை ஏற்படுத்தினால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் முஸ்லிம்கள் ஒரு அரசியல் பிரிவாக வளர்ச்சியுற்றிருக்கின்றனர். முஸ்லிம்கள் இந்தியாவிற்கு நெருக்கமானதொரு மக்கள் பிரிவாக ஒரு போதுமே இருக்கப் போவதில்லை. இந்த பின்புலத்தில் கிழக்கு மாகாணத்தில் இந்தியாவிற்கு நெருக்கமான மக்கள் கூட்டமென்றால், அது இந்து தமிழ் மக்கள் மட்டும்தான். அந்த மக்கள் மத்தியிலும் சீனாவின் செல்வாக்கு அதிகரித்தால் அது இந்தியாவிற்கு நல்லதல்ல.

இந்தியா பல்வேறு உதவிகளை செய்திருக்கின்றது. ஆனால் சமூகத்தோடு ஊடாடக் கூடிய திட்டங்களில் இந்திய தூதரகம் அதிகம் நாட்டம் கொள்வதில்லை. இனியும் அப்படி இருக்க முடியுமா? சர்வதேச அரசுசாரா நிறுவனங்கள் உள்ளூர் நிறுவனங்களின் திட்டங்களுக்கு நிதியளித்தாலும் கூட, அவைகள் எந்தளவிற்கு சரியான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன என்பதில் கேள்விகளுண்டு. நிபுணத்தும் வாய்ந்த உள்ளூர் நிறுவனங்கள் மூலம் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்பதிலும் சந்தேகங்கள் உண்டு.

சீனா ஒவ்வொரு அடியையும் அவசரப்படாமல் எடுத்துவைப்பதாகவே தெரிகின்றது. அதே வேளை சீனாவின் நகர்வுகள் நீண்டகால நோக்கம் கொண்டது. இந்தியாவின் ஆர்வங்களை நன்கு கணித்தே சீனா ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கின்றது. வடக்கில் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் மீது இந்தியா செல்வாக்குச் செலுத்த முடியும் ஆனால் கிழக்கு அப்படியல்ல. ஏனெனில் கிழக்கிலங்கை தமிழ் மக்கள், தாங்கள் பல்வேறு விடயங்களில் பின்தங்கியிருப்பதாக கருதுகின்றனர். வடக்கிற்கு இருப்பது போன்று புலம்பெயர் ஆதரவு கிழக்கிலங்கை தமிழர்களுக்கில்லை. இந்த இடைவெளி சீனாவிற்கு மிகவும் சாதகமானது.

சீனா என்ன நோக்கில் இலங்கையை பயன்படுத்த விளைகின்றது என்னும் கேள்விகளுடன்தான் அனைத்தும் தொடர்புபட்டிருக்கின்றது. தன்னை நோக்கி மேற்கொள்ளப்படும் மேற்குலக நகர்வுகளை எதிர்கொள்ளுவதற்கான ஒரு தடுப்பரணாக இலங்கையை பயன்படுத்த முயற்சிக்கின்றதா? இந்தியாவுடன் எல்லைப்புறங்களிலுள்ள பிரச்சினைகளுக்கு பதிலளிப்பதற்கான ஒரு துப்புச் சீட்டாக இந்தியாவின் உடனடி அயல்நாடொன்றை பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றதா? இவைகள் ஊகங்கள் மட்டுமே ஏனெனில் புவிசார் அரசியல் மோதல்கள் தொடர்பில் துல்லியமான கணிப்புக்களை எவருமே செய்ய முடியாது. சில அவதானங்களை மட்டுமே முன்வைக்கலாம். புவிசார் அரசியல் போட்டிகளில் எதுவும் நடக்கலாம்.



ஆனால் சீனா அண்மைக்காலமாக, தமிழ் பகுதிகள் மீது ஆர்வம் காண்பித்துவருகின்றது என்பது மட்டும் உண்மை. உதவித் திட்டங்கள் மூலம், சீனா தமிழ் மக்களுடன் நெருங்க முயற்சிக்கின்றது - நெருங்கும் என்பதும் உண்மை.

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |

**60.** **பொருத்தமான வாக்கியங்கள்**

## கல்வி tv CHANNEL-1

**09.09.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**09.09.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நிந்தவூர் செல்கிறார் டக்ளஸ்

அம்பாறை, செப். 09

அம்பாறை மாவட்டத்தின் முக்கிய பிரதேசமான நிந்தவூர்ப் பகுதியில் ஏற்பட்டுள்ள உக்கிர கடலரிப்பு அனர்த்த பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்காக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

நிந்தவூர் கடலரிப்பு விவகாரம் தொடர்பில் நிந்தவூர் பிரதேச சபை உப தவிசாளர் வை. எல்.சுலைமாலெவ்வை அமைச்சரை கொழும்பு அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து தெளிவுபடுத்தி பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்தார். இந்த சந்திப்பின்போதே அமைச்சர் டக்ளஸ், நேரில் வருகை தந்து பார்வையிட்டு ஆவன செய்வதாக உப தவிசாளரிடம் உறுதியளித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் தமது நிந்தவூர்ப் பகுதிக்கான விஜயத்துக்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறும் அமைச்சர் டக்ளஸ் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இதேவேளை, உபதவிசாளர் வை.எல்.சுலைமாலெவ்வை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்தபோது பல்வேறு கோரிக்கைகளையும் அவரிடம் முன்வைத்துள்ளார்.

குறிப்பாக அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்குதல், கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள நிந்தவூர் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குதல், கடலரிப்பை நிரந்தரமாகக் கட்டுப்படுத்துவதற்கு கிழக்கு மேற்காகத் தடுப்புச்சுவர் அமைத்தல் முதலான கோரிக்கைகளை உபதவிசாளர் சுலைமாலெவ்வை அமைச்சரிடம் முன்வைத்து வலியுறுத்தியுள்ளார். (அ-06)

# எழுத்தாளர்கள் ஒன்றுகூடல்

திருமலை, செப். 09

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்ற எழுத்தாளர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வும், பிரதேச சாகித்திய விழாவும், நாளை சனிக்கிழமை காலை 09 மணியளவில் மூதூர் - சேனையூர் அநாமிகா பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளன.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு முதன்மை அழைப்பாளராக ஓய்வுபெற்ற அதிபர் இரா. இரத்தினசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வுக்கு கிண்ணியா, மூதூர், வெருகல் மற்றும் சேருநுவர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இருக்கின்ற எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டு, அவர்களுக்குள் ஓர் அறிமுகத்தையும், அவர்களுக்குள் இருக்கின்ற கலை, கலாசார செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடனேயே இந்த ஒன்றுகூடல் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலமாக, மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இவ்வாறான நிகழ்வுகளை மாவட்ட ரீதியாகவும், பிரதேச செயலகங்கள் ரீதியாகவும் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பிள்ளையான் மட்டக்களப்பு மாவட்டத்துக்கே சாபக்கேடு

## சபையில் சாணக்கியன் எம்.பி. பேச்சு

கொழும்பு, செப்.09

**"பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சாபக்கேடு" - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய சாணக்கியன் எம்.பி.,

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பிரச்னைகள் காணப்படுகின்றன. பாடசாலைகளும் இராணுவம் வசமுள்ளது. இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் பிரச்னை தோற்றம் பெற்றுள்ளது.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தனது கட்சி மாநாட்டுக்கு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை மட்டக்களப்புக்கு அழைத்து வரவேற்பளித்துள்ளார்.

தனது சொந்த மாவட்டத்துக்குச் செல்ல முடியாத நிலையில் நாமல் ராஜபக்ஷ உள்ளார். அவ்வாறிருக்கையில் நாமல் ராஜபக்ஷவை மேடையில் ஏற்றி மட்டக்களப்பு மாவட்ட மக்களைத் தரம் குறைத்துள்ள சந்திரகாந்தனைச் சபையில் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாமல் இருந்திருந்தால் அம்பாறை மாவட்டத்துக்கு ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவம் கூடக் கிடைத்திருக்காது.

கல்முனை பிரதேச செயலகப் பிரிவு குறித்து விரிவுபடுத்தப்பட்ட பேச்சை முன்னெடுப்போம்- என்றார். (அ-06)

# கல்முனை பகுதியில் 3 இளம் பிக்குகளை துஷ்பிரயோகம் செய்த பௌத்த மதகுரு!

அம்பாறை, செப். 09

3 இளம் பிக்குகளை கல்முனை பகுதி விஹாரை ஒன்றில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்த பௌத்த மதகுருவை கைது செய்ய பொலிஸாரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஹாரை ஒன்றில் புதிதாக இணைந்த 3 இளம் பிக்குகள் திடீர் சுகயீனம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த மாதம் இறுதிப் பகுதியில் பெற்றோரினால் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் குறித்த வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கமைய அம்பாறை பொது வைத்தியசாலையில் உள்ள பிக்குகளுக்கான தனியான சிகிச்சை பிரிவுக்கு 3 இளம் பிக்குகளும் வைத்திய பரிசோதனைக்காக மாற்றப்பட்டனர்.

இந்த 3 இளம் பிக்குகளும் தாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் தலைமை பௌத்த துறவியினால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகியதாக சட்ட வைத்திய அதிகாரியிடம் குறிப்பிட்டனர்.

இதனை அடுத்து குறித்த 3 இளம் பிக்குகளும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதாக சட்ட வைத்திய அதிகாரியும் தனது வைத்திய அறிக்கை ஊடாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவித்தார்.

இதனை அடுத்து இச்சம்பவம் தொடர்பில் மருத்துவ அறிக்கை பிரகாரம் செப்ரெம்பர் 01 ஆம் திகதி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்பின் பேரில் மாவட்ட சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவினர் வைத்தியசாலைக்கு சென்று விசாரணை மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட இளம் பிக்குகளின் பெற்றோர் ஏற்கனவே வழங்கிய முறைப்பாட்டிற்கமைய அம்பாறை பகுதியில் இருந்து சென்ற விசேட பொலிஸார் கல்முனை பகுதியில் உள்ள குறித்த பௌத்த விஹாரைக்கு சென்று விசாரணை மேற்கொண்டதுடன் சந்தேக நபரான பிரதான பௌத்த மதகுருவிடம் வாக்குமூலங்களை பெற்றிருந்தனர்.

தற்போது குறித்த பௌத்த மதகுரு தலைமறைவாகி உள்ளதாகவும் விசேட பொலிஸ் குழுவினர் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர் எனவும் கூறப்பட்டது. (அ)

# கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் பொலிஸாருக்கான மருத்துவ முகாம்

அம்பாறை, செப். 09

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுகாதார வைத்திய அதிகாரி ஏ. ஆர். எம் அஸ்மி வழிகாட்டலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸாருக்கான மருத்துவ முகாம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்சின் பக்கீர் தலைமையில் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற மேற்படி மருத்துவ முகாமில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சமூக சேவை பொலிஸ் பிரிவு, சுற்றுச்சூழல் பொலிஸ் பிரிவு போக்குவரத்து பிரிவு, சிறு குற்றத்தடுப்புப் பிரிவு ,பெருங் குற்றத்தடுப்புப் பிரிவு , சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவு என்பன பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 156ஆவது ஆண்டு நிறைவு செப்ரெம்பர் மாதம் 3 ஆந் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நாடு பூராகவும் இடம்பெற்று வருகின்ற நிலையில் இந்த மருத்துவ முகாமானது பொலிஸாருக்கு போசாக்கான அறிவை மேம்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டதுடன் உடல் நிறை குறியீட்டு என்பன பரிசோதனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(அ-06)



# கல்முனை சாஹிரா மீண்டும் சம்பியன்!

அம்பாறை, செப். 09

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் 2022 இக்கான பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகின்றது. இதில் ஒரு அங்கமாக சதுரங்கப் போட்டி கல்முனை சாஹிரா கல்லூரி காரியப்பர் மண்டபத்தில் 4ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெற்று முடிந்தது.

இதில் 20வயதிற்குட்பட் ஆண்களுக்கான பிரிவில் கல்முனை ஸாஹிறா கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனாகவும், 17வயதிற்குட்பட்ட பிரிவில் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டதோடு தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்கும் வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

மேலும் தனித்திறமைக்கான தெரிவில் 20 வயதிற்குட்பட்ட பிரிவில் ஏ.எச்.எம்.ஏ.சிமாம், எம்.எச்.எம். நுஸ்ரத் மற்றும் எம்.ஏ.ஏ.அத்தீப் ஆகிய மாணவர்களும், 17வயதிற்குட்பட்ட பிரிவில் எம்.ஏ.தமீம், எம்.இசட். எம்..சனீப் ஆகிய மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், மாணவர்ளுக்கு பயிற்சியளித்த பயிற்றுவிப்பாளர் ஏ.எம்.சாகிர், மாணவர்களை வழிப்படுத்திய சதுரங்க பொறுப்பாசிரியர் எம்.வை.எம்.ரகீப், கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர், ஆகியோருக்கு பாடசாலை சமூகத்தினர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர். (அ)



# அமெரிக்காவின் எதேச்சதிகாரத்துக்கு எதிராக ரஷ்யா தொடர்ந்து போராடும்

## ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவிப்பு

மொஸ்கோ, செப். 09

அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் ரஷ்யாவின் இறையாண்மையைக் குலைத்து, தங்களது எதேச்சதிகாரத்தை உலகம் முழுவதும் நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிராக ரஷ்யா தொடர்ந்து போராடும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் கிழக்கே உள்ள துறைமுக நகரான விளாதிவோஸ்டோகில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற வருடாந்த பொருளாதார மாநாட்டில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

ரஷ்ய மசகு எண்ணெய்க்கு விலை வரம்பு நிர்ணயிக்க மேற்கத்திய நாடுகள் மேற்கொள்ளும் திட்டம் அபத்தம் நிறைந்ததாகும். அந்த திட்டத்தை மேற்கத்திய நாடுகள் செயற்படுத்தினால் அந்த நாடுகளுக்கு எந்த நன்மையும் கிடைக்காது.



மாறாக, சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிக் கும்.

நம்மிடமிருந்து மசகு எண்ணெய் வாங்குவதற்கு ஆசியாவில் போதிய நாடுகள் உள்ளன. சர்வதேச சந்தையில் ரஷ்ய மசகு எண்ணெய்க்கு அபரிமிதமான தேவை உள்ளது. எனவே, மேற்கத்திய நாடுகள் எவ்வளவு முயன்றாலும் நமது மசகு எண்ணெய் விற்பனைக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியாது எனவும் புடின் குறிப்பிட்டார்.

நோர்ட் ஸ்ட்ரீம்-1 குழாய் வழித்தடம் மூலம் தங்களுக்கு எரிவாயு விநியோகிக்கப்படுவதை நிறுத்தி வைத்துள்ளதன் மூலம் உக்ரைன் விவகாரத்தில் எரிவாயு விநியோகத்தை நான் ஆயுதமாகப் பயன்படுத்துவதாக ஐரோப்பிய நாடுகள் குற்றம் சாட்டுகின்றன. ஆனால், உண்மையிலேயே அந்த நாடுகள் விதித்த பொருளாதாரத் தடைகளால்தான் நோர்ட் ஸ்ட்ரீம்-1 குழாய் வழித்தடத்தில் தொழில்நுட்பக் கோளாறுகளை சரிசெய்ய முடியாமல் எரிவாயு விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்கத்திய நாடுகள் இப்போது அமோதித்தால் கூட, நோர்ட் ஸ்ட்ரீம்-2 குழாய் வழித்தடம் மூலம் உடனடியாக எரிவாயு விநியோகம் செய்யத் தயாராக இருக்கிறேன் எனவும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் குறிப்பிட்டார். (அ)



# இன குழுக்கள் இடையே சூடனில் கடும் மோதல்!

## 380 பேர் பலி!!

கார்ட்டூம், செப். 09

வடகிழக்கு ஆபிரிக்க நாடான சூடானில் இரு இனக் குழுவினருக்கு இடையே அண்மைக் காலமாக நடைபெற்று வரும் மோதலில் இதுவரை 380 பேர் உயிரிழந்ததாக ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் டார்பர் பகுதியில் அரபு பழங்குடியினருக்கும் அரபு அல்லாத பழங்குடியினருக்கும் இடையே கடந்த ஜனவரி முதல் ஒகஸ்ட் வரை 224 மோதல் சம்பவங்கள் நடைபெற்றாகவும், இதில் 430-க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சூடானில் நீண்ட காலமாக நீடித்து வரும் இன மோதல்கள், கடந்த ஆண்டு ஏற்பட்ட ராணுவப் புரட்சிக்குப் பிறகு மேலும் தீவிரமடைந்து இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. (அ)

# போரில் பிரிந்த குடும்பங்களின் ஒன்றிணைவு; வடகொரியாவுக்கு தென் கொரியா அழைப்பு!

சியோல், செப். 09

1950 முதல் 53 வரையான கொரியப் போரினால் பிரிந்த குடும்பங்களை மீண்டும் ஒன்றிணைப்பது பற்றி வட கொரியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த தென் கொரியா முன்வந்துள்ளது.

வட கொரியாவுடன் முறுகல்கள் உள்ள போதும் இன்று வியாழக்கிழமை தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் பகிரங்கமாக இந்த அழைப்பை விடுத்தார்.

ஜனாதிபதி யூன் சுக்-யோல் இவ்வாறான நல்லிணக்க சமிக்ஞையை இன்று வெளியிட்டுள்ள போதும் வட கொரியா இதற்கு சாதகமாக பதிலளிக்கும் வாய்ப்புகள் குறைவாகவே உள்ளதாகத் தெரிகிறது.

ஜனாதிபதி யூன் சுக்-யோல் நிர்வாகத்துடன் நல்லுறவுகளை தொடர்ந்து நிராகரித்து வரும் வட கொரியா, அதன் ஆயுத பலத்தை அதிகரிப்பதிலேயே தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றது.

எனினும் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை விடுத்துள்ள தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோலின், பேச்சுவார்த்தைக்கு பொருத்தமான திகதி, நேரம் மற்றும் விடயங்களை தீர்மானிப்பதில் வட கொரியாவின் விருப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி யூன் சுக்-யோலின் அழைப்பு குறித்து வட கொரியாவிடம் இருந்து நேர்மறையான பதிலை எதிர்பார்த்துள்ளதாக கொரிய நாடுகளுக்கிடையேயான விவகாரங்களுக்குப் பொறுப்பான ஒருங்கிணைப்பு அமைச்சர் குவான் யங்-சே தெரிவித்துள்ளார்.

பிரிந்த குடும்பங்களின் பிரச்னை உட்பட மனிதாபிமான விடயங்களில் நேர்மையான விவாதத்திற்கு இரு தரப்பு பொறுப்புள்ள அதிகாரிகள் கூடிய விரைவில் நேரில் சந்திப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம் எனவும் என்று குவான் யங்-சே இன்று செய்தியாளர்களிடம் கூறினார்.

முன்னர் முக்கிய விடுமுறை நாட்களில் இரண்டு கொரியாக்களும் போரின் போது பிரிந்த குடும்பங்களை ஒன்றிணைக்கும் நிகழ்வுகளை பெருமெடுப்பில் நடத்தின.

எனினும் வட கொரியாவின் அதிக எண்ணிக்கையிலான ஏவுகணை சோதனைகளை நடத்தியது மற்றும் 2017 க்குப் பிறகு மற்றொரு அணுசக்தி சோதனைக்கு தயாராக உள்ளமை உள்ளிட்ட பல காரணங்களால் இரு கொரியாக்களுக்கு இடையிலான உறவுகள் சீர்கெட்டுள்ளன. (அ)

# அணுகுண்டு தயாரிக்க தேவையான யுரேனியம் ஈரானின் கையிருப்பில்!

## அணு ஆயுத தடுப்பு நிபுணர்கள் எச்சரிக்கை



நியூயோர்க், செப். 09

அணுசக்தி ஒப்பந்தத்தை மீறி, அதிகளவு செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஈரான் கையிருப்பு வைத்துள்ளதாக நம்புவதாக ஐ.நா. சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு சபை நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜேர்மனியுடன் 2015-ஆம் ஆண்டு மேற்கொளள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தில், யுரேனியம் கையிருப்பை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க ஈரான் ஒப்புக்கொண்டது.

எனினும் இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகம் விலகி, ஈரான் மீது மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதித்தது. இதைத் தொடர்ந்து ஒப்பந்த நிபந்தனைகளை ஈரான் படிப்படியாக மீறி வருகிறது. அதன் ஒரு பகுதியாக யுரேனியம் கையிருப்பை அந்த நாடு அதிகரித்து வருகிறது எனவும் ஐ.நா. சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு கூறியுள்ளது.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை மீண்டும் ஏற்படுத்த அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மீண்டும் முயன்று வரும் நிலையில் தெஹ்ரானின் இந்த நிலைப்பாடு கவலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானிடம் 55.6 கிலோ கிராம் (122.6 பவுண்டுகள்) அதிகளவு செறிவூட்டப்பட்ட யுரேனியம் உள்ளதாக கிடைக்கப்பெற்ற ஆதாரங்களைக் கொண்டு நம்புதாக உறுப்பு நாடுகளுக்கு அனுப்பிய தனது இரகசிய காலாண்டு அறிக்கையில் ஐ.நா. சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இது மே மாதத்திலிருந்து 12.5 கிலோகிராம் அதிகரித்துள்ளது என்று நம்புவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, குறைந்தபட்சம் ஒரு அணுகுண்டு தயாரிப்பதற்குத் தேவையான அதிகளவு செறிவூட்டப்பட்ட யுரேனியம் இப்போது ஈரானிடம் உள்ளது என்று அணு ஆயுத பரவல் தடுப்பு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (அ)

# வியட்நாம் பொழுதுபோக்கு மையத்தில் பெரும் தீ விபத்து

## 33 பேர் உயிரிழப்பு

ஹனோய், செப். 09

தெற்கு வியட்நாமில் பல அடுக்கு மாடிகளைக் கொண்ட "கரோக்கி பார்லர்" பொழுதுபோக்கு மையம் ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி 33 பேர் உயிரிழந்துள்ளனர்.

பின் டுவாங் மாகாணத்தில் உள்ள துவான் அன் நகரில் உள்ள பல அடுக்கு அரங்கில் செவ்வாய்க் கிழமை பிற்பகுதியில் பற்றி எரியத் தொடங்கிய தீ, நேற்றுமுன் தினம் முழுநாளும் கொழுந்துவிட்டு எரிந்ததாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கட்டத்துக்குள் தொழிலாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் சிக்கினர். நேற்றுமுன்தினம் வரையும் கட்டிடத்தின் சில பகுதிகள் அணுக முடியாத நிலை இருந்தது. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியதால் கட்டத்திற்குள் சிக்கியவர்கள் தீயில் கருகியும் மூச்சுத் திணறல் ஏற்பட்டும் உயிரிழந்தனர். சிலர் தீயில் இருந்து தப்பிக்க மேல் மாடியில் இருந்து குதித்த போது உயிரிழந்தனர். இவ்வாறு குதித்த சிலர் கை, கால்கள் எலும்பு முறிவு உட்பட பலத்த தாகமடைந்தனர். தீயணைப்பு வீரர்கள் தீயணைப்பு வாகனங்களில் இருந்த ஏணிகளை பயன்படுத்தி சிக்கியிருந்த பலரைக் காப்பாற்றினர்.

இந்தத் தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வியட்நாம் ஜனாதிபதி நுயென் சுவான் ஃபூக் இரங்கல் தெரிவித்துள்ளார். அத்துடன், தீவிபத்துக்கான காரணத்தை விரைவாகக் கண்டறிய விசாரணைகளை உடன் ஆரம்பிக்குமாறும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுமாறும் அரசாங்க அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

முதற்கட்ட விசாரணையில், மின் கசிவு காரணமாக, இரண்டாவது அல்லது மூன்றாவது மாடியில் மின்கசிவு ஏற்பட்டதாகவும் பின்னர் அது கட்டடமெங்கும் பரவியதாகவும் தெரியவந்துள்ளது. (அ)



# ஆசிய கிண்ண இறுதி; இலங்கை அணி தகுதி!

டுபாய், செப். 09

ஆசியக் கிண்ண இருபது - 20 போட்டியின் இறுதியாட்டத்துக்கு இலங்கை அணி தகுதி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை பாகிஸ்தான் அணியை வெற்றி கொண்டது.

இதன் மூலம் இந்திய அணி இறுதியாட்டத்துக்கு நுழைய இருந்த சிறிய சந்தர்ப்பம் இல்லாமல் போனது. இதனால், இலங்கை அணி இலகுவாக முற்கூட்டியே இறுதிப் போட்டிக்கான வாய்ப்பைப் பெற்றுக் கொண்டது.

ஆசியக் கிண்ண இறுதிப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், இன்று இலங்கை அணியும் பாகிஸ்தான் அணியும் மோதவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் அரையிறுதி பட்டியல் தயார்!

நியூயோர்க், செப். 09

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் அரையிறுதியில் மோதும் வீராங்கனைகளின் பட்டியல் உறுதியாகியுள்ளது.

இந்தமுறை அமெரிக்க ஓப்பனில் மகளிர் ஒற்றையர் பிரிவில் தரவரிசையில் முதல் 6 வீராங்கனைகளில் உள்ள மூன்று பேர் அரையிறுதிக்கு நுழைந்துள்ளார்கள்.

போலந்தின் வீராங்கனை ஸ்வியாரெக் 6-3, 7-6 (4) என்ற நேர் செற்களில் அமெரிக்காவின் ஜெசிகா பெகுலாவுக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தை வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

பெலாரஸின் அரினா சபலென்கா, ஒன்ஸ் ஜபேர், கரோலினா கார்சியா ஆகியோரும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்கள்.

மகளிர் ஒற்றையர் தரவரிசையில் ஸ்வியாரெக் முதல் இடத்திலும் ஒன்ஸ் ஜபேர் 5ஆவது இடத்திலும் அரினா சபலென்கா 6ஆவது இடத்திலும் கரோலினா கார்சியா 17ஆவது இடத்திலும் உள்ளார்கள்.

அமெரிக்க ஓப்பன் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஸ்வியாரெக் - அரினா சபலென்கா, ஒன்ஸ் ஜபேர் - கரோலினா கார்சியா இடையில் நடைபெறவுள்ளன.




சம்பியன்ஸ் லீக் உதைபந்து

## குழுநிலை சுற்று ஆரம்பம் 'செல்சீ'க்கு தொடர் தோல்வி

லண்டன், செப். 09

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட போட்டியின் குழுநிலை சுற்று ஆட்டங்கள் தொடங்கியிருக்கும் நிலையில், செல்சீ அணி முதல் ஆட்டத்திலேயே தோல்வி கண்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் அந்த அணியை 0-1 என்ற கணக்கில் வீழ்த்தியது டைனமோ ஜாக்ரெப். ஆட்டத்தில் டைனமோவுக்காக மிஸ்லாவ் ஆர்சிச் 13ஆவது நிமிடத்தில் கோலடித்தார்.

இந்நிலையில், நடப்பு தொடரில் செல்சீ மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவதால் பயிற்றுநர் தோமஸ் டுசெலை அந்த அணி நிர் வாகம் நீக்கியிருக்கிறது.

இதர முக்கிய அணிகளின் போட்டிகளில் பாரிஸ் சென் ஜெர்மைன் 2-1 என ஜூவென்டஸை தோற்கடித்தது. பாரிஸ் அணிக்காக கிலியன் பாபே 5 மற்றும் 22ஆவது நிமிடங்களில் கோலடிக்க, ஜூவென்டஸூக்காக வெஸ்டன் மெக்கென்னி 53ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். (ஐ)



ஆசிய கிண்ணப் போட்டி:

## ஆப்கானிஸ்தானை வீழ்த்தி பாகிஸ்தான் இறுதிக்கு தகுதி!

சார்ஜா, செப். 09

நடப்பு ஆசிய கிண்ணத் தொடரின் சுப்பர் - 4 சுற்றில் ஆப்கானிஸ்தான் அணியை ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியுள்ளது பாகிஸ்தான். இந்த வெற்றியின் மூலம் இந்தியாவை இறுதியாட்டத்துக்கு முன்னேறும் வாய்ப்புள்ள அணியின் பட்டியலிலிருந்து வெளியேற்றியுள்ளது பாகிஸ்தான்.

சார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

ஆப்கானிஸ்தான் அணி துடுப்பாட்ட வீரர்கள் 20 ஓவர்களில் ஆறு விக்கெட்கள் இழப்புக்கு வெறும் 129 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தனர். இதன் காரணமாக 130 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்கை பாகிஸ்தான் விரட்டியது.

பாபர் அசாம், ரிஸ்வான் போன்ற துடுப்பாட்ட வீரர்களை விரைந்து ஆட்டமிழக்க செய்தது ஆப்கானிஸ்தான். குறிப்பாக, சீரான இடைவெளியில் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களின் விக்கெட்களை வீழ்த்தி வந்தனர் அந்த அணியின் பந்துவீச்சாளர்கள். அதன் காரணமாக ஆட்டத்தின் கட்டுப்பாட்டை இரு அணிகளும் மாறிமாறி கொண்டிருந்தன. கடைசி ஓவரில் பாகிஸ்தான் வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இதேநேரத்தில் அந்த அணி 9 விக்கெட்களை இழந்திருந்தது. அதனால் ஆப்கானிஸ்தான் வெற்றிக்கு ஒரே ஒரு விக்கெட் மட்டுமே தேவைப்பட்டது. ஆனால், அந்தக் கடைசி ஓவரின் முதல் இரண்டு பந்துகளையும் சிக்ஸருக்கு விளாசி வெற்றியை உறுதி செய்தார் நசீம் ஷா. இதன் மூலம் பாகிஸ்தான் ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ஐ)

## ஆப்கானின் பரீத்தை அடிக்க முயன்ற ஆசிப்

சார்ஜா, செப். 08

பாகிஸ்தான் வீரர் ஆசிப் அலி, ஆப்கானிஸ்தான் வீரர் பரீத் அகமதுவை துடுப்பு மட்டையால் அடிக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆசிய கிண்ண இருபது - 20 தொடரில் நேற்று முன்தினம் சார்ஜாவில் நடந்த சுப்பர் -4 சுற்றில் கடைசி ஓவரில் ஆப்கானிஸ்தானை ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி பாகிஸ்தான் த்ரில் வெற்றிபெற்றது.

போட்டியில் பாகிஸ்தான் வீரர் ஆசிப் அலி, ஆப்கானிஸ்தான் வீரர் பரீத் அகமதுவை துடுப்பு மட்டையால் அடிக்க முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

19வது ஓவரில் பரீத்தின் பந்தில் சிக்ஸர் அடித்த ஆசிப் அலி, அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்தார். விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியில் பரீத் ஆவேசமாக கத்தினார். இதனால், ஆத்திரம் அடைந்த ஆசிப் அலி, அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அத்துடன், தனது துடுப்பு மட்டையையும் அவரை நோக்கி ஓங்கினார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்ட நிலையில் நடுவர்களும் சக வீரர்களும் இருவரையும் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர். (ஐ)



# தேரேறிவரும் அன்னதானக் கந்தனுக்கு அரோகரா!

மதுரகவி
காரை எம்.பி. அருளானந்தன்



ஈழமணித் திருநாட்டின் தென்பால் கதிர்காம கந்தனுடைய ஆலயம் விளங்கு வது போல வடபால் செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. அன்னதானக் கந்தனாக தொண்டமனாறு ஆற்றங்கரை யிலே அருளாட்சி செய்து வருகின்ற சந்நிதிக் கந்தனுக்கு இன்று பக்தி பூர்வ மாக தேர்த்திருவிழா நடைபெறுகின் றது.

இன்றைய தேர்த்திருவிழாவின் ஈழத்தின் பல பாகங்களிருந்தும் வேற்று நாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக் கான முருக பக்தர்கள் செல்வச்சந்நிதியில் கூடுகின்ற கண்கொள்ளாக் காட்சியைக் காணமுடிகிறது.

கதிர்காமத்தில் காவடிக்கந்தனாகவும் மாவிட்டபுரத்தில் அபிஷேக கந்தனாக வும் நல்லூரில் அலங்காரக்கந்தனாகவும் அருளர்பாலித்துக் கொண்டிருக்கின்ற முருகப்பெருமான் செவ்வச்சந்நிதியில் அன்னதானக் கந்தனாக ஆற்றங்கரை யினில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான். வட இலங்கை யில் வடமராட்சிப்பகுதியில் தொண்ட மனாறு என்னும் புராதன நகரம் உண்டு கருணாகரத் தொண்டமான் எனும் சிற்ற ரசுடன் தொடர்பூண்ட நகரம். இந்தப் பெயரால் வழங்கப்பட்டு வரு கின்றது. தொண்டமான் ஆற்றங்கரையில் கழி முகத்துக்கு அண்மையில் செவ்வச் சந்நிதி முருகன் கோயில் அமைந்துள் ளது.

செல்வச்சந்நிதி ஆலயம் சின்னக் கதிர்காமம். செவ்வக்கதிர்காமம் , கல லோடை எனும் சிறப்பு பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. கோயில் சூழலில் இயற்றை அழகு எல்லோரையும் ஈரப்பது மருத மரக்காடும் பாக்கு நீரி ணைக் கடலும் மருங்கே காணும் வய லும் இடையே கிழக்கே இருக்கும் வல்வை வெளியும் திணை ஒழுக்கம் காட்டும் செல்வ சந்நிதியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடத்துகின்றனர்.

இந்த ஆலயத்தில் நடைபெறும் வழி பாட்டுக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. இரு ஆலயங்களிலும் வேதாகம் முறையி லான வழிபாடு இல்லை. பூசையில் மந்தி ரங்கள் இடம்பெறுவதில்லை. வேறு எந்த கோயிலிலும் காணப்படாத சடங்கு முறையே சந்நிதியில் காணப்படு கின்றது. கதிர்காமத்து கொடியேற்ற நாளில் ஏற்ற சந்நிதி முருகன் கதிர்காமம் செல்வதாக வும் பின்னர் கதிர்காமத்து தீர்த்தத் திரு விழாவன்று சந்நிதி திரும்பி வருவ தாகவும் சடங்குகள் செய்யப்படுகின்றன.

ஒருநாள் இரவு முருகன் பூசாரியார் கதிர்காமரை நித்திரையில் இருந்து எழுப்பி அப்பா நான் பாதயாத்திரையாக வந்ததமையால் பசி, தாகம் அதிகரித் துள்ளது. ஏதும் உண்பதற்கு கொடு என்று கேட்டாராம். கதிர்காமரும் நான் தங்களுக்கு அமுது படைக்க இவ்வேளை எங்கு போவேன் என்று மனம் நொந்தார். உன்னிடம் இருக்கும் சிறிதளவான பயறை துவைத்து இளநீரும் தா என்று கேட்டு வாங்கி முருகன் திருவமுது செய்தார். இன்றும் அவ்விதமாக பயற் றம் உருண்டையும் இளநீரும் கதிர்காமத் திலிருந்து திரும்பி வருகின்ற முருகனுக்கு பூசைக்கு படையல் செய்து வருவது நடைமுறையில் உள்ளது.

செவ்வாசந்நிதி சூழலிலே காணப் பட்ட மடங்கள் சில சிதைந்த நிலையில் இருக்கின்றன. அந்த காலங்களில் அம்மடங்களிலே அடியார்கள் தங்கவும் அன்னதானம் நிறைவேற்றவும் வசதியாக அமைந்தன. இன்றும் சந்நிதியான் ஆச்சிரமம் , ஆனந்தா ஆச்சிரமம் போன்ற மடங்கள் அந்தப்பணியை நிறை வேற்றி வருகின்றன. சந்நிதி பூசை நேரங்களில் ஒலிக்கும் பறைமேளம் அன்பர்களை பரவசப்படுத்தும் , நிறைந்த கற்பூர ஒளியிலும் செறிந்து புகை மண் டல நடுவிலே மின்னல் போல் ஒளிரும் வேலின் தோற்றம் கண்டு பரவசப்படா தார் எவருமில்லை என்றே கூறலாம். சந்நிதி முலஸ்தானத்தில் வேலே காட்சி யளித்து எம்மை ஆட்சி செய்கின்றது.

மருதர் கதிர்காமராலே வணங்கப் பட்ட வேல் கருவறையில் இறையருளை பொழிந்த வண்ணமாகவே உள்ளது. வீர வேலாக விண்ணோர் சிறைமீட்ட தீர வேலாக உமையவள் ஈய்த்து வந்த ஞான வேலாக சந்நிதி கோயிலில் எழுந்தருளி அருளாட்சி புரியும் வேலுக்குத்தான் எத்தனை வல்லமை, எத்தனை மகிமை எந்நிதியும் தருவான் சந்நிதியான் என அவன் திருப்பாதத்தை பற்றி ஈழத்தமிழ் மக்கள் இன்று வேலவன் ஆரோகணித்து வரும் திருத்தேவை வடம் பற்றி வலம் வந்து வாழ்வு கேட்டு நிற்கின்றனர். நிரந்தரமான தீர்வினை தந்து தேசத்தில் வாழ்விக்க வேண்டும் என மன்றாடி நிற்கின்றனர்.

# வவுனியாவில் மாணவர்கள் மத்தியில் போதை ஊசிப் பயன்பாடு அதிகரிப்பு

## தமிழ் விருட்சம் அமைப்பு சுட்டிக்காட்டு

வவுனியா, செப். 09

“வவுனியாவில் அண்மைக் காலமாகப் போதை ஊசிப் பயன் பாடு பாடசாலை செல்லும் மாணவர்கள் மத்தியில் அதி கரித்துக் காணப்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்தப் பொலி ஸார், பெற்றோர்கள் மற்றும் அரச - தனியார் நிறுவனங்கள் முன்வரவேண்டும்.”

- இவ்வாறு தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவரும் சமூக ஆர்வலருமான எஸ். சந்திர குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

மாணவர்கள் தவறான வழி களில் சென்றால் அவர்களின் எதிர்காலம் சிதைவடைந்து விடும். எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீது அதிக கவனமுடன் செயற்படவேண்டும்.

இன்றைய நிலைமையில் 16 வயதுக்கு மேற்பட்ட பாட சாலை செல்லும் மாணவர்கள் பல்வேறு போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி வரு கின்றனர். அத்துடன் வவுனியா வில் அண்மைய சில காலமாக போதை ஊசிப் பயன்பாடு அதி கரித்துச் செல்கின்றது.

இவ்வாறான சிலர் அடை யாளம் காணப்பட்டு பொலி ஸாரின் உதவியுடன் வெலிக் கந்தை புனர்வாழ்வு நிலையத் துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளனர். 16 வயதுக்குட்பட்ட பாடசாலை செல்லும் மாண வர்களே அதிகளவில் காணப் படுகின்றனர் .

எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகளில் அதிக கவ னம் செலுத்தி அவர்கள் எங்கு செல்கின்றார்கள், யாருடன் பழக்கம் வைத்திருக்கின்றார்கள், எவ்வாறான நிலைமைகளில் வீடு வருகின்றார்கள் என்ற தக வல்களைத் துல்லியமாக அறிந்து வைத்திருக்க வேண்டும்.

மாணவர்களுக்கு எவ்வழி களில் போதை ஊசி வழங்கப் படுகின்றன, இவை யாரால் எங்கிருந்து விநியோகம் செய் யப்படுகின்றன போன்ற கேள்வி களுக்கான பதில்கள் பொலி ஸாரால் கண்டறியப்படவேண் டும் - என்றார். (அ)

# மற்றுமொரு பெற்றோல் கப்பல் இந்த வாரம் நாட்டுக்கு வருகிறது

கொழும்பு, செப். 09

பெற்றோலை ஏற்றிய கப்ப லொன்று இந்த வாரத்திற்குள் நாட்டை வந்தடையவுள்ளது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பலுக்கான ஆரம் பக் கட்டணம் செலுத்தப்பட் டுள்ளது எனவும் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கப்பல் நாட்டை வந்தடைந் தவுடன் மிகுதி கட்டணம் செலுத்தப்படவுள்ளது.

35,000 முதல் 40,000 மெற் றிக் தொன் பெற்றோலை ஏற் றிய கப்பலே இவ்வாரத்திற்குள் நாட்டை வந்தடையவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் பேச்சாளர் மேலும் கூறினார். (அ)

# சித்திர கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 09

சுவடி நிறுவகத்தின் ஏற் பாட்டில் சிறுவர் சித்திரக் கண்காட்சி இன்று முதல் 10 நாளை மறுதினம் வரை ‘எழு திரள்’, 209, பலாலி வீதி, கோண்டாவிலில் காலை 9மணி முதல் - மாலை 5 மணி வரை இடம்பெறும்.

இச் சிறுவர் சித்திரக் கண் காட்சி சுவடி நிறுவகத்தால் முன்னெடுக்கப்படும் யாழ்ப் பாணம் மாசற்ற மாநகரம் செயற்திட்டத்தின் ஒரு அங்க மாகும். நல்லூர் உற்சவகாலத் தினை முன்னிட்டு நடத்தப் பட்ட ஓவியப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட தரமான ஓவியங்கள் அனைத்தும் சிறுவர் சித்திரக் கண்காட்சியில் காட் சிப்படுத்தப்படவுள்ளன. ஒவ் வொரு பிரிவிலும் சிறப்பான ஓவியங்களிற்குப் பரிசுகளும் பங்குபற்றிய அனைத்து மாண வர்களிற்கும் சான்றிதழ்களும் சிறுவர் சித்திரக் கண்காட்சியில் வைத்துக் கையளிக்கப்படவுள் ளன. (அ)

# இலங்கைக்கு நெதர்லாந்து, நியூசிலாந்து விதித்திருந்த பயணக் கட்டுப்பாடு நீக்கம்

கொழும்பு, செப். 09

நெதர்லாந்து மற்றும் நியூசி லாந்து ஆகிய நாடுகள் இலங் கைக்கு விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளன.

இதனால், 11 நாடுகள் இலங் கைக்கான பயணக் கட்டுப்பாடு களை தளர்த்தியுள்ளன.

பிரிட்டன், சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, டென்மார்க், நோர்வே, சுவீடன், கனடா மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகள் இலங்கைக்கு விதித்திருந்த பயணக் கட்டுப்பாடு களை முன்னதாக தளர்த்தியுள் ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# சவப்பெட்டிகளின் விலை இரு மடங்காக அதிகரிப்பு

கொழும்பு, செப். 09

சவப்பெட்டிகளின் விலை மற்றும் இறுதிக் கிரியைகளுக் கான ஏனைய கட்டணங்களும் இரண்டு மடங்காக அதிகரித் துள்ளது.

இதன் காரணமாக இறந்த வர்களின் உறவினர்கள் பெரும் இன்னல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

30,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட பிணப் பெட்டி யின் விலை தற்போது 60,000 ரூபா வரை அதிகரித்துள்ளது.

அத்துடன், அமரர் ஊர்தி வாடகை, மலர் வளையங்களின் விலை உட்பட சகல சேவைகளி னதும் கட்டணங்கள் வெகுவாக அதிகரித்துள்ளன. (அ)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 1500 கிலோ கிராம் மஞ்சள் சிக்கியது

யாழ்ப்பாணம், செப். 09

நாட்டுக்கு சட்டவிரோத மான முறையில் கொண்டு வரப் பட்ட 1500 கிலோ கிராம் மஞ் சளை இராணுவத்தினர் கைப் பற்றினர்.

சட்டவிரோதமான முறை யில், இறக்குமதி செய்வதற்கு தடைசெய்யப்பட்ட ஒரு தொகை மஞ்சள் கடத்தப்படு வது தொடர்பில் இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த பொதிகள் மீட்கப்பட்டன.

36 பாரிய மூடைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த மஞ்சளை இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து நேற்றுமுன் தினம் கைப்பற்றினர்.

இதன்போது, பூநகரி வலைப்பாடு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபர் ஒரு வரும் கைது செய்யப்பட்டார்.

மீட்கப்பட்ட மஞ்சள் ஜெய புரம் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டுள்ளனர்.

## மரம்...

மாதகல் பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில், அதே இடத்தைச் சேர்ந்த பாக்கியநாதன் ஜோசப் இமானுவேல் (வயது 66) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருகையில்,

உயிரிழந்த நபர் மரத்தின் கொப்புகளை வெட்டுவதற்காக மரத்தில் ஏறிய வேளை தடுமாறி விழுந்துள்ளார். அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்காக அம்புலன்ஸ் சேவையினர் உடனடியாக அங்கு விரைந்தனர்.

ஆனால், அவசர உயிர் காப்பு பிரிவினர் அவரைப் பரிசோதித்தபோது ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரின் சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-3)

## டிசெம்பர்...

"கடந்த வாரம் தினமும் ஒரு மணி நேரம் மின் வெட்டு இடம்பெறும் என்று அறிவித்திருந்த போதிலும் அந்த ஒரு மணித்தியால மின்வெட்டும் மேற்கொள்ளப்படவில்லை. 3ஆம் திகதியில் இருந்து இன்று வரை மின் வெட்டு இல்லை. இதற்கு காரணம் நம்மிடம் இருக்கும் மின்சாரத்தின் தேவை குறைந்துள்ளது.

எனவே, மின்வெட்டுக்கு அவசியம் ஏற்படவில்லை. 5ஆம் திகதி வழங்கல் அதிகரித்துள்ளது. தேவையான அளவைவிட அதிகளவில் உற்பத்தி செய்யும் திறன் எங்களிடம் தற்போது உள்ளது. எனவே, நிலக்கரி பிரச்னை எதிர்வரும் இரண்டு மூன்று வாரங்களுக்கு வரவில்லை என்றால் ஒரு மணித்தியால மின்வெட்டும் மேற்கொள்ளப்படாது.

தேவையான அளவு தண்ணீர் இருந்தால், நிலக்கரி இருந்தால், வரும் டிசெம்பர் மாதம் வரை. மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் இருக்காது" என்றும் கூறினார். (ஐ)

## பாலியல்...

பாலியல் வன்முறை உட்பட ஏனைய சர்வதேச குற்றங்கள் இடம்பெற்றன என்பதற்கான நம்பகதன்மைமிக்க ஆதாரங்கள் உள்ளன. ஆனாலும், குற்றவாளிகளுக்கு எதிராக இலங்கை சட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

பாலியல் பலாத்காரத்திலிருந்து உயிர் தப்பியவர்கள் மற்றும் பாலியல் வன்முறைகளுக் உள்ளானவர்களின் குடும்பத்தவர்கள் அரசியல்மயப்படுத்தப்பட்ட நீதிமன்றங்களிடமிருந்து அரிதாகவே நீதியை பெற்றுள்ளனர்.

பாதிக்கப்பட்ட தமிழர்களை காட்டிலும் படையினரையே விசேடமாக பாதுகாக்க நினைக்கும் இலங்கையின் ஜனாதிபதிகளின் முன்மாதிரியை நீதிமன்றங்கள் பின்பற்றுகின்றன. அதிகளவு இராணுவ மயப்படுத்தப்பட்ட சூழலில் வாழும் தமிழ் யுவதிகள், பெண்கள் பாலியல் வன்புணர்வு, துஷ்பிரயோகம், துன்புறுத்தல் போன்ற ஆபத்துக்களை அதிகம் எதிர்கொள்கின்றனர்.

பாலியல் வன்புணர்வின் பின்னர் உயிர் தப்பிய தமிழர்களும் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தவர்களும் பழிவாங்கப்படும் அச்சம், நீதித்துறையில் நீடிக்கும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தல் ஆகியவற்றையும் எதிர்கொள்கின்றனர்.

பாலியல்வன்முறைகள் மற்றும் ஏனைய குற்றங்களை விசாரணை செய்வதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. இந்நிலையில், மோதல் தொடர்பான பாலியல் குற்றங்கள் மற்றும் பிற சர்வதேச குற்றங்களால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கும் உயிர் தப்பியவர்களுக்கும் சர்வதேச நீதி மாத்திரமே ஒரேயொரு பரிகாரமாக உள்ளது - என்றுள்ளது. (ஐ)

## சமூக..

நாயகர் சமூக பாதுகாப்பு உதவுத் தொகை அறவீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்புக்கு சபை இணக்கமா என கேட்டபோது, தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க சட்டமூலத்துக்கு வாக்கெடுப்பை கோரினார்.

இதையடுத்து நடந்த வாக்களிப்பில், சட்டமூலத்துக்கு ஆதரவாக 91 வாக்குகள் அளிக்கப்பட்டன. எதிராக 10வாக்குகள் அளிக்கப்பட்டன. இதன் பிரகாரம் சமூக பாதுகாப்பு உதவு தொகை அறவீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 81மேலதிக வாக்குகளால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

இதன் மூலம் உற்பத்தி, இறக்குமதி, விநியோகம், விற்பனை என்பன மீது 2, 5வீத வரி அறவீடு அமுலாகின்றது.

இந்த சட்டமூலத்துக்கான வாக்களிப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட தமிழ்த் தேசிய கட்சிகள் எவையும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. (ஐ)

## சந்நிதி...

தொடர்ந்து காலை 8 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.நாளை சனிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும், மாலை 6 மணிக்கு மௌனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ-2)

## எம்மை...

பற்றி வெளியிட்ட குற்றச்சாட் டுகள் குறித்து கருத்து வெளியிட்டபோதே நாமல் எம். பி. மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டபோது, கொழும்பு இரவு விடுதிகளில் சாணக்கியன் கும்மாளமடித்துக் கொண்டிருந்த காலங்களிலேயே நாங்கள் தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்திகளையும் தமிழ் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றும் பணிகளையும் செய்யத் தொடங்கிவிட்டோம்.

அப்போதெல்லாம் இரவு விடுதிகளுக்குள் முடங்கிக் கிடந்த தம்பி சாணக்கியன், இப்போது தன் சுயநல அரசியலுக்காக எம்மை விமர்சிக்கத் தொடங்கியிருக்கிறார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைகள், மருத்துவமனைகள், வீட்டுத்திட்டங்கள், வேலை வாய்ப்புகள், விளையாட்டுக் கழகங்கள் எனப் பல உதவிகளைச் செய்திருக்கிறோம். இவற்றில் பலவற்றை அந்தப் பிரதேச பாராளுமன்ற உறுப்பினரான சாணக்கியன் நேரில் பார்த்தே இருக்கமாட்டார்.

அப்படிப்பட்ட சுயநல அரசியல்வாதிக்கு எம்மைப்போன்ற மக்கள் சேவகர்களை விமர்சிக்கும் எந்தவோர் அருகதையும் கிடையவே கிடையாது.

பிள்ளையான் என்பவர் அன்று தொடக்கம் இன்றுவரை தான் கொண்ட கொள்கையில் மாற்றமின்றி, கட்சி தாவலின்றி எம்மோடு தொடர்ந்து பயணித்து வருகிறார். அவரின் கட்சி நிகழ்வில் நாம் கலந்துகொள்வது தார்மீகக் கடமையும் கூட. நிலைமை அப்படியிருக்கையில், அலரி மாளிகைக்கு அடிக்கடி வந்து எம்மோடு தேநீர் அருந்துவதும், நிலையான அரசியல் கொள்கையின்றி கட்சி தாவி சுயநலத்துக்காக தமிழ் மக்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்துவதையும் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கிறது.

நாங்கள் இப்போதும் எமக்கு வாக்களித்த மக்களைப் பயமின்றி சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால், புலம்பெயர் தமிழர்களால் ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டதையும், லண்டன் கூட்டத்தை இரத்து செய்யும் நிலையேற்பட்டதையும் சாணக்கியன் மறந்துவிடக்கூடாது" - என்றும் கூறினார். (ஐ)

## சமந்தா...

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, பிரதமர் தினேஷ் குண வர்தன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அரசியல் மற்றும் சிவில் பிரதிநிதிகளை அவர் கொழும்பில் சந்தித்து கலந்துரையாட உள்ளார்.

மேலும் ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்து இலங்கைக்கான விஜயம் குறித்தும் எதிர்கால அமெரிக்க உதவித் திட்டங்கள் குறித்தும் விளக்கமளிக்க உள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 25ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க உதவி திட்டத்தின் தலைமை அதிகாரி சமந்தா பவர், இதன்போது இலங்கைக்கும் விஜயம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்தார்.

ஆனால் நாட்டில் காணப்பட்ட போராட்டங்கள் மற்றும் அரசியல் குழப்ப நிலை காரணமாக அவரது இலங்கைக்கான விஜயம் கால வரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் போன்ற விடயங்களில் சமந்தா பவர் கூடுதலாக அவதானம் செலுத்தக் கூடியவர்.

இம்மாதம் மாதம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பிக்கப்படவுள்ள மனித உரிமை பேரவைக் கூட்டத்தொடர் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சுவார்த்தைகள் உட்பட பல்வேறு முக்கிய விடயங்களை எதிர்கொள்கின்ற நிலையில் அமெரிக்காவின் ஒத்துழைப்புகள் இலங்கைக்கு அத்தியாவசியமாகின்றது.

இவ்வாறானதொரு தருணத்தில் சமந்தா பவரின் இலங்கை விஜயம் அமைகின்றமை முக்கியமானகதாகவே கருதப்படுகின்றது. (அ)

## பிரித்தானியா...

குடும்பத்தினர் கூடினர்.

மகாராணியின் மரணத்தைத் தொடர்ந்து அவரின் மூத்த மகன் சார்ள்ஸ் புதிய அரசாகவும் பொதுநலவாய நாடுகளின் தலைவராகவும் செயல்படுவார் என்று பர்கிங்ஹாம் மாளிகை அறிவித்துள்ளது.

மகாராணியின் மரணம் குறித்து பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்ட அறிக்கையில், "இன்று (நேற்று) பிற்பகல் பால்மோரலில் ராணி நிம்மதியாக இறந்தார்" ராஜாவும், ராணியும் இன்று (நேற்று) பால்மோரலில் தங்குவார்கள் நாளை (இன்று) லண்டன் செல்வார்கள்", என்று அறிவிக்கப்பட்டது.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் முழுப்பெயர் எலிசபெத் அலெக்சாண்ட்ரா மேரி வின்ட்சர் லண்டனில் 1926 ஏப்ரல் 21 அன்று பிறந்தார். கிரீஸின் இளவரசர் பிலிப்பை காதலித்தார். இருவரும் 1947 நவம்பர் 20 இல் திருமணத்தில் இணைந்தனர். கோமகன் பிலிப் தனது 99ஆவது வயதில் 2021 ஆம் ஆண்டு காலமானார். இருவருக்கும் மூன்று மகன்கள், ஒரு மகள். இவர்கள் மூலம் 8 பேரப் பிள்ளைகளையும், 12 கொள்ளுப் பேரப்பிள்ளைகளையும் இவர்கள் கண்டனர்.

1952இல் மகாராணியின் தந்தை அரசர் 4ஆம் ஜோர்ஜ் காலமானமையைத் தொடர்ந்து இரண்டாம் எலிசபெத் என்ற பெயருடன் இவர் முடிசூடினார். இதைத் தொடர்ந்து சுமார் 70 ஆண்டுகள் அவர் ஆட்சி செய்தார். இதன்மூலம் பிரித்தானியாவை நீண்டகாலம் அரசாண்டவர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மரணத்துக்கு உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர். (ஐ)

## திருக்கோணேஸ்...

இந்த ஆக்கிரமிப்பு திட்டத்துக்கு வழமைபோன்று தொல்பொருள் திணைக்களத்தினரும் கிழக்கு மாகாண ஆளுநரும் ஆதரவளிக்கின்றனர் என ஆலயத்தின் சார்பில் பேசவல்ல ஒருவர் 'ஈழநாடு'வுக்கு தெரிவித்தார்.

இதேசமயம், திருக்கோணேஸ்வரர் ஆலய பகுதியை சுற்றுலா அபிவிருத்திக்கு உள்வாங்குவதற்கும் இதற்காக ஆலய காணியை சுவீகரிக்கவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் எதிர்ப்பு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இதற்கு அந்த மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் இரு வருடங்களுக்கும் மேலாக மாவட்டத்துக்கு வருகை தரவில்லை என்பதும் ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில் அவர் பங்கேற்பதில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஆலயத்துக்கு சொந்தமான 18 ஏக்கர் காணிக்குள் உல்லாசத்துறை திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த ஆலய பரிபாலன சபையினருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தமிழரின் தொன்மை நிறைந்த - பாடல் பெற்ற சிறப்புப் பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்து தமிழ் மக்களும், இந்து மக்களும் முன்வரவேண்டும் என்றும் ஆலயத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 37 இராஜாங்க...

ஏற்றார்கள்.

இதில், சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளை யான்) - கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், சதாசிவம் வியாழேந் திரன் - வர்த்தக இரா ஜாங்க அமைச்சர், சுரேன் ராகவன் - உயர் கல்வி இராஜாங்க அமைச்சராக பதவியேற்றனர்.

இதேபோன்று, காதர் மஸ்தான் - கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், அரவிந்த குமார் - கல்வி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர, ஜகத் புஷ்பகுமார - வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, ரஞ்சித் சியபலாபிட்டிய - நிதி, லசந்த அழகியவண்ண - போக்குவரத்து, திலும் அமுனுகம - முதலீடு மற்றும் ஊக்குவிப்பு, கனக ஹேரத் - தொழிநுட்பம், ஜானக வக்கும்புர - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி, செஹான் சேமசிங்க - நிதி, மொஹான் பிரியதர்ஷன் டி சில்வா - விவசாயம், தேனுக விதானகே - பொருளாதார அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு, பிரமித பண்டார தென்னகோன் - பாதுகாப்பு, ரோஹண திஸாநாயக்க - விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், அருந்திக பெர்னாண்டோ - நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு, விஜித பேருகொட - பிரிவெனா கல்வி, லொஹான் ரத்வத்தை - பெருந்தோட்டக் கைத்தொழில், தாரக பாலசூரிய - வெளிவிவகாரம்.

இந்திக அனுருத்த - மின்சக்தி மற்றும் எரிசக்தி, சனத் நிஷாந்த - நீர் வழங்கல், சிறிபால கம்லத் - நெடுஞ்சாலைகள், சாந்த பண்டார - ஊடகத்துறை, அனுராத ஜயரத்ன - நீதி மற்றும் சிறைச்சாலைகள், சிசிர ஜெயக்கொடி - சுதேச மருத்துவம், பியால் நிஷாந்த டி சில்வா - கடற்றொழில், பிரசன்ன ரணவீர - சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள், டி.வி.சானக்க - வனவிலங்கு மற்றும் வனவளங்கள், டி.பி.ஹேரத் - வள அபிவிருத்தி, ஷசீந்திர ராஜபக்ச - நீர்ப்பாசனம், சீதா அரம்பேபொல - சுகாதாரம், அசோக பிரியந்த - உள்நாட்டலுவல்கள், கீதா குமாரசிங்க - பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரம், டயானா கமகே - சுற்றுலா, சாமர தசநாயக்க - ஆரம்ப கைத்தொழில், அனுப பாஸ்குவால் - சமூக அதிகாரமளித்தல் - ஆகியோர் பதவியேற்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சஜித் - நாமல் சபையில் கடும் கருத்து மோதல்!

கொழும்பு, செப். 09

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்‌ஷவுக்கும் இடையில் நேற்று பாராளுமன்றத்தில் கடும் வார்த்தைப் பரிமாற்றம் இடம்பெற்றது.

கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற போராட்டத்தின் போது ஜனாதிபதி செயலகத்துக்குள் பலவந்தமாக பிரவேசித்த குற்றச்சாட்டில் நடிகை தமிதா அபேரத்ன கைது செய்யப்பட்டமை மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டக்காரர்கள் மீதான அடக்குமுறை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

அப்பாவி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்படும் அடக்குமுறையை நிறுத்துமாறும் நடிகை தமிதா அபேரத்னவை தடுத்து வைப்பதைத் தவிர்க்குமாறும் அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் இவ்வாறான அடக்குமுறைகள் தொடரும் போது அனைத்து அரசியல் கட்சிகளும் எவ்வாறு முன்வந்து அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் என்றும் அவர் மேலும் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதனையடுத்து, எதிர்க்கட்சித் தலைவருக்குப் பதிலளித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்‌ஷ, நாட்டின் தற்போதைய சட்டங்களின்படி குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளுக்கு இணங்கி ஒத்துழைக்கவேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதையடுத்து, நாமல் ராஜபக்‌ஷவுக்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர், பொதுமக்களின் பிரதிநிதித்துவத்தை ராஜபக்‌ஷ குடும்பத்தாலோ அல்லது நாமல் ராஜபக்‌ஷவோ தீர்மானிக்க முடியாது என அவர் கூறினார். (அ)

# இலங்கைக்கு உரம் வழங்க மறுக்கும் விநியோகஸ்தர்கள்

கொழும்பு, செப். 09

உலக சந்தையில் இருந்து உரங்களை கொள்வனவு செய்வதில் விவசாய அமைச்சு பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி மற்றும் இருப்பு பற்றாக்குறையை காரணம் காட்டி சில உர விநியோகஸ்தர்கள் உரத்தை வழங்க மறுத்து வருவதாக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உரம் கொள்வனவு செய்வதில் இலங்கை முன்வைத்த நிபந்தனைகளுக்கு சர்வதேச உர விநியோகஸ்தர்கள் உடன்பட மறுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், 10,000 மெற்றிக் தொன் உரம் அமைச்சிடம் கையிருப்பாக உள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# நாட்டில் 50 வீதம் பேருக்கு விற்றமின் டி குறைபாடு!

கொழும்பு, செப். 09

நாட்டின் சனத்தொகையில் சுமார் 50 வீதமானவர்கள் விற்றமின் டி குறைபாடுடன் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

களுபோவில போதனா வைத்தியசாலையின் உட்சுரப்பியல் நிபுணர் மருத்துவர் நிரஞ்சலா மீகொட விதான இதனைத் தெரிவித்தார்.

விற்றமின் டி குறைபாட்டால் மக்கள் பல்வேறு நோய்கள் மற்றும் துன்பங்களுக்கு உள்ளாகுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சூரிய ஒளி மூலம் சாதாரண மக்கள் தங்களுக்குத் தேவையான விற்றமின் டி பெற முடியும் என்றும், இது மிகவும் எளிமையான முறையெனவும் அவர் கூறினார்.

ஒரு சராசரி நபர் வாரத்தில் மூன்று நாட்கள் ஒரு நாளைக்கு அரை மணி நேரம் சூரிய ஒளியில் இருப்பது முக்கியமானது எனவும் மருத்துவர் நிரஞ்சலா மீகொட சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# 13 சுயாதீன எம்.பிக்களின் கருத்து சுதந்திரம் பறிப்பு!

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 09

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து சுயாதீனமாக எதிர்த்தரப்பில் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும உட்பட்ட 13 பேருக்கு பாராளுமன்றில் கருத்துக்களை வெளியிடுவதற்கு நேரம் ஒதுக்காமை தொடர்பில், நேற்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின.

டலஸ் அழகப்பெரும இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றில் கேள்வி எழுப்பியமையை அடுத்து, அவருக்கு சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசாநாயக்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தமது வாதங்களை முன்வைத்தனர்.

இதனையடுத்து கருத்துரைத்த அவைத் தலைவர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, தாம் அரசாங்கத்தில் இருந்து சுயாதீனமாக செயற்பட்டதுபோது, தாம் நிதிக் குழுவில் இருந்து விலக்கப்பட்டதாகவும், கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் பறிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

எனினும் தமக்காக எவரும் பேசவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். இருப்பினும் டலஸ் அழகப்பெரும உட்பட்ட 13 பேரின் பிரச்னை தொடர்பாக ஆராயப்படும் என்று உறுதியளித்தார். (அ)

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடுகள்!

கொழும்பு, செப். 09

நாட்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 1996 வீடுகளை நிர்மாணிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீடுகள் பேலியகொடை, தெமட்டகொடை, மொறட்டுவை, மஹரகம மற்றும் கொட்டாவை பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்த வீடுகளை அரசியல் தொடர்புகள் அல்லது சிபாரிசுகளின் பேரில் வழங்குவதை முற்றாக தவிர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்னுரிமை மற்றும் சரியான தேவையின் அடிப்படையில் மாத்திரம் இந்த வீடுகளை உரியவர்களுக்கு வழங்குவதற்கு தேவையான பொறிமுறையொன்றை உடனடியாக தயாரிக்குமாறும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இதேசமயம், நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அனைத்து மாகாணங்களிலும் பல்வேறு கருப்பொருள்களின் கீழ் கண்காட்சிகளை நடத்துவதற்கும், தேவேந்திர முனையில் இருந்து பருத்தித்துறை வரையில் கண்காட்சி சைக்கிள் சவாரி ஒன்றை நடத்த ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்காக பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் மேற்பார்வையில், ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் உப குழுக்களை நியமிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். (ஐ)

# அரச வன்முறைகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி போராடும்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, செப். 09

அரச மிலேச்சத்தனம் மற்றும் அரச வன்முறைகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி மக்களுடன் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக போராடும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கலைஞர்கள் போன்றவர்களை அரசாங்கம் வெறுப்பதாகவும் அவர்களைக் கண்ட இடத்தில் கைது செய்வதற்கு அரசாங்கம் சிந்தித்து வருவதாக தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

கலைஞர் தமிதா அபேரத்னவுக்கு 9 ஆம் திகதியே பொலிஸில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் ஆனால் அவர் தியத உயன போராட்டத்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டதாகவும் கூறினார்.

# போசாக்கின்மை அதிகரிக்கவில்லை

## கூறுகிறது சுகாதார அமைச்சு

கொழும்பு, செப். 09

இலங்கையில் யுனிசெப் தெரிவிப்பதை போன்று போசாக்கு குறைபாடுகள் அதிகரிக்கவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் போசாக்கு குறைபாடு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்குள்ளான குடும்பங்களைக் கண்டறிந்து, அந்த குடும்பங்களுக்கு அவசர சத்துணவுத் திட்டத்தை செயற்படுத்தவேண்டியது அவசியம் எனவும் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளர் தெரிவித்தார். (அ)

# சிமெந்து, கம்பிகளுக்கு வருகிறது நிர்ணய விலை

கொழும்பு, செப். 09

கட்டுமானத் தொழில் துறையில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை உயர்வுகளை அடுத்து, சிமெந்து மற்றும் கம்பி போன்ற முக்கிய பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பது தொடர்பான பரிசீலனையை நுகர்வோர் விவகார அதிகார சபை மேற்கொண்டு வருவதாக அறியமுடிகிறது.

பொருளாதார ஸ்திரமின்மைக்கு மத்தியில் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான வழிகளைக் கண்டறிந்து உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு வர்த்தக அமைச்சருக்கு ஜனாதிபதி விடுத்த பணிப்புரைக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சந்தையில் விலைகள் வேகமாக அதிகரித்து வருவதால் கட்டுமானத் துறையில் பல பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பதற்கும் அதிகார சபை ஆராய்ந்து வருகிறது.

2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2022 ஜூன் வரை அரச மற்றும் தனியார் விநியோகஸ்தர்களால் விற்பனை செய்யப்படும் 50 கிலோ சிமெந்து மூடையின் சராசரி விலை 187 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 98 சதவீதம் அதிகரித்துள்ளதாக கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தரவுகள் தெரிவிக்கின்றன. (ஐ)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய டிப்பர் வாகனத்தின் சாரதி கைது!

யாழ்ப்பாணம், செப். 09

உரிய அனுமதிகள் இன்றி மணல் ஏற்றி வந்த டிப்பர் சாரதியை கைது செய்துள்ள அச்சுவேலி பொலிஸார் டிப்பர் வாகனத்தையும் கைப்பற்றினர்.

பளைப் பகுதியில் இருந்து உரிய அனுமதிகள் இன்றி, சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிய வாறு டிப்பர் வாகனம் ஒன்று வருவதாக நேற்று முன் தினம் புதன்கிழமை அச்சுவேலி பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

தகவலின் பிரகாரம் வீதி சோதனை நடவடிக்கையில் அச்சுவேலி பொலிஸார் ஈடுபட்டிருந்த வேளை அனுமதியின்றி மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தை வழிமறித்து சாரதியை கைது செய்தததுடன், மணலுடன் வாகனத்தை கைப்பற்றி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

கைது செய்யப்பட்டுள்ள சாரதி புத்தூர் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.00 அணி :இயற்கை வழி



07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.யாழ்பாவாணன்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மலையாள திரைப்படம்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : ஞாழசவ குடைஅ
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10



**இரவு**
7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகேகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு